

பி. ஸ்ரீ

21. தீர்ந்தும் தீரவில்லையே !

'உன் கடவுளுக்கா சரணாகதி? என் கடவுள் என் வாள்தானே !' என்று சொல்லிக் கொண்டே சிரிக்கிறான் உக்கிரமாக. கையிலேந்திய அந்த வாளுடன் எதிரியை நோக்கி நடக்கிறான். இரணியன் சிரிக்கக் கை வாளும் சிரிக்கிறது பள பள வென்று !

இதுதானா போர் ?

எதிர்க்க நெருங்குகிறான் இரணியன். நெருங்கவே, கணக்கில்லாத கை கால்கள் அப்படியே தழுவிக் கட்டுகின்றன. இது தான் இப் போரின் தொடக்கம்.

இந்த நிலையிலும் இரணியனது உக்கிரம் சற்றும் குன்றவில்லை. போருக்கு ஆயத்தமாகி உயிருள்ள மேருவைப் போல் நின்றானல்லவா ! இன்னும் அதே நிலை கலங்காத நிலை தான் !

முதன் முதல் சிங்கத்தின் வரவு நோக்கி நின்றவன் தான். அச்சமயத்தில் மகன் தனக்கு அறிவு கூறத்துணிந்ததும் அதை இகழ்ந்து விட்டு, சிங்கம் நம்மை நோக்கி வரும் வரை நாம் ஏன் காத்திருக்க வேண்டுமென்று கருதியதுபோல், உக்கிரமாக எதிர்த்துச் சென்றான்.

பல தோள்களுக்கும் கால்களுக்கும் இடையே சிக்கிக் கொண்டான் இரணியன் ஒரே கணத்தில். மறு கணத்திலே இரணியனது கால்கள் இரண்டையும் ஒருசேரப் பிடித்துச் சுழற்றுகிறது ஒரு பெரிய கை.

இவ்வளவு தான் போராட்டமெல்லாம். இனி, இரணியன் செய்வது ஒன்றுமேயில்லை, — வதைக்கு உட்படுவது தவிர !

நகம் ஊன்றியதுமே மார்பிலிருந்து இரத்தம் பெருகுகிறது. ஆம்; அந்தி வேளை வந்து விட்டதல்லவா ! இந்த அஸ்தமனத்துடன் இரணிய சர்வாதிகார அஸ்தமனமும் ஆகி விட்டதே !

'பகலிலும் சாக மாட்டேன்; இரவிலும் சாகமாட்டேன்' என்று வரம் பெற்றிருந்தவனல்லவா ! அந்தி வேளை வரவேண்டுமென்று தான் இவ்வளவு தாமதம் கூட !

என்ன பயங்கர முடிவு!

அரண்மனையில் ஸர்வாதிகாரம் 'இரணியாய நம' என்று உலகம் வணங்க வணங்காமுடித் தனி அரசு புரிந்ததே, அதே அரண்மனையில் முடிந்து போகிறது !

அரண்மனை வெளி வாசற்படியிலே சாவு ! 'உள்ளேயும் சாக மாட்டேன்; வெளியிலேயும் சாகமாட்டேன்' என்று பிடிவாதமாக வரம் பெற்ற பலன் இது!

நரசிங்கமூர்த்தி தன் தொடையின் மேல் வைத்துக் கொண்டே இரணிய வதம் செய்தருளுகிறான். 'மண்ணில் சாகிலன்; வானிலும் சாகிலன்' என்பது வரமல்லவா !

எந்தக் கருவியாலும் கொல்ல முடியாத இரணியனது வச்சிர மார்பைக் கிழித்து விடுகின்றன சிங்கத்தின் கூரிய நகங்கள்.

கொள்ளைத் தெய்வவான்
படைக்கலம் யாவையும்
கொல்லா!

என்பது தானே வரம்!

இரணியனது வீர பராக்கிரமங்கள், திக்குவிஜயங்கள், ஆரவார ஆவேச அட்டகாசங்கள் எத்தனை பாடல்களில் வளர்ந்து படர்கின்றன! எவ்வளவு விரைவில் எல்லாம் மாயமாக மறைந்து போய் விடுகின்றன!

தரும விரோதமாகத் தழைத்துப் படரும் அசுர சக்திகளின் வாழ்வே இப்படித்தான்! உலகத்தை நடுங்கச் செய்து சாதுக்களை, ஏழைகளைக் கண்ணீர் விடச் செய்யும் தீவினையின் கதி இதுதான்!

அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும், எந்தக் காலத்திலும், ராவண பயங்கர சக்தியும் இரணிய பயங்கர சக்தியும் பாழாக்கித் தானும் பாழாகி, இப்படியே முடிவில் ஒரு சூனியமாய்ப் போகின்றன!

இரணியன் நரசிங்கத்துடன் நடைபோடும் மேரு மலை போலக் கம்பீரமாக வந்து தாக்குவது தான் எவ்வளவு சப்த ஆடம்பரத்துடன் வருணிக்கப்படுகிறது!

நகைசெயா வாயும்
கையும் வாளொடு
நடந்த தாளும்

புகைசெயா நெடுந்தீப்
பொங்க, உருத்(து)எதிர்
பொருந்தப் புக்கான்;

தொகைசெய்வார்க்(கு) அரிய
தோளால், தாள்களால்
சுற்றிச் சூழ்ந்தான்,

மிகைசெய்வார் வினைகட்
கெல்லாம் மேல்செயும்
வினையம் வல்லான்.

[நகைசெயா – நகை செய்து. தாளும் – கால்களும். புகை செயா – புகை செய்து. நெடுந்தீப் பொங்க – நெருப்பு நாக்கை நீட்டிக் கொண்டு பொங்குவது போல. உருத்து – கோபித்து. தொகை செய்வார்க்கு – கணித நூல் நிபுணர்களுக்கும். மிகை செய்வார் – மிக்க துன்பம் செய்பவர்களின். வினைகள் – செயல்கள்; செய் தொழில்கள். வினையம் – செய் தொழில்; வஞ்சக வேலைப்பாடு.]

இதே பாட்டின் பிற்பகுதியிலேயே எதிர்ப்பிற்கு எதிர்ப்பு வந்து பொருந்தி விடுகிறது. துன்பம் செய்யும் அசுரத் தொழிலை அதற்கும் மேலான செய்தொழில் – திறம் சுற்றி வளைக்கிறது. அசுர வஞ்சகத்தை அதற்கும் மேலான சூழ்ச்சி சூழ்ந்து மூடிக் கொள்கிறது.

இரணியன் என்ற பொன்னிறத் தீரனை மாமேரு மலை போலக் காண்கிறோ தயென்றால், பகவானுடைய மாயமோ, 'மேரு அல்லாத பிரபஞ்ச மெல்லாம் அதுவே!' என்று பிரமிக்குமாறு சூழ்ந்து கிடக்கிறது.

எந்த அசுர சக்திதான் தப்ப முடியும் இந்தச் சூழலை, – இந்தச் சூழ்ச்சியை!

வெருவருந் தோற்றத்(து)
அஞ்சா வெஞ்சின
அவுணன், மேரு

அருவரை ஒத்தான்;
மாயன் அல்லவை
எல்லாம் ஒத்தான்!

[வெருவருந் தோற்றத்து – யாவரும் அஞ்சும்படியான தோற்றத்தை உடைய. அஞ்சா – எதற்கும் எவர்க்கும் அஞ்சாத. வெஞ்சின அவுணன் – கொடிய கோபத்தை யுடைய அசுரனை இரணியன். மேரு அருவரை–அரிய மகாமேரு மலை.]

அடிக்கும் கையும் அணைக்கும் கையும்

இப்படி அணைத்துக்கொண்டிருக்கும் மாயன் மாயத்தையும் தப்ப முடியாது; மாயன் அருளையும் தப்ப முடியாது. இது கம்பன் காட்டும் சமய உண்மைகளில் ஒன்று.

பிரகலாதனைச் சுற்றிச் சூழ்ந்து அணைத்துக் காத்த அன்புக் கைகளே, இரணியனை அமுக்கி வதைக்கின்றன. மைந்தனுக்கு அன்புப் பாசம் தந்தைக்கு எம பாசம்!

சுற்றிச் சூழ்ந்து கொண்ட சிங்க சொரூப வளர்ச்சிக்கிடையே இரணியன் அகப்பட்டுக் கொள்வதைப் பார்க்கும் கண் இமைப்பதற்கு முன்பே,

தாளிணை இரண்டும்
பற்றிச் சுழற்றினன்
தடக்கை ஒன்றால்

[தாளிணை இரண்டும் – ஒன்றோடொன்று ஒத்த இரணியனது இரண்டு கால்களையும். தடக்கை – பெரிய கை.]
என்ற காட்சியையும் கண்டு விடுகிறோம்.



சிங்கப்பிரானின் வெண்ணிறமான கைந் நகம் ஊன்றியதும் இரணியனுடைய வயிர மார்பிலிருந்து இரத்தம் பெருகுவதையும் கண்டு, போரின் இறுதிக் காட்சியையும் இமைப்பொழுதில் கண்டு விடுகிறோம்.

ஆணவ ஆவேசத்தில் தூணை அடித்துப் பிளந்த அந்தக் கைக்குச் சிங்கத்தை ஓர் அடி கூட அடிக்கத் தெரியவில்லையே!

வாளினைத் தொழுவ
தல்லால் ......

என்று இரணிய ஆணவம் சரணாகதி செய்யத் துணிந்ததே, அந்த வாள் தான் என்ன உதவி செய்து விட்டது தன்னை நம்பியவனுக்கு!

சிங்கம்தான் போர் செய்ததா! அந்தப் போரின் தன்மை என்ன!

தான்தனி ஒருவன்
தன்னை உரைசெயும்
தரத்தன் நானோ?

என்று தான் சொல்லுகிறான், நரசிம்ம உபாஸனை செய்து வரப்பிரசாதம் பெற்றுப் பாடுவது போல பாடும் இக் கவிஞனும். அன்பரை அணைக்கும் கைதான் இரணியனையும் அணைத்துக் கொண்டு விட்டது!

'வான்தரு வள்ளல்'

இந்த ஒருவனை, ஏகமூர்த்தியை 'வான்தரு வள்ளல்' என்று இப்போது

சுட்டிக் காட்டுகிறது கவியுள்ளம். 'கடவுள் மண்ணிலும் இல்லை; விண்ணிலும் இல்லை' என்று மறுத்த இரணிய நாஸ்திகத்திற்கு விடையாக வானம் தந்திருக்கிறதாம் இவ்வள்ளலை.

'வானத்திலே என்ன இருக்கிறது? வெறும் பாழ்; சுத்த சூனியமான வெட்ட வெளி' என்கிறார்கள் சூனிய வாதிகள். இக்கருத்தைத் தான் ஒரு சூத்திரமாக்கி,

அம்பலமாவது ஆகாசம்,
உற்றுப் பாரு;

அருளில்லை, பொருளில்லை;
கண்டு தேறு!

என்று உள்ளுக்குள்ளே பரம நாஸ்திகரான ஆதனூர் வேதியனாரும் 'நந்தன் சரித்திரக்கீர்த்தனை'யில், வெளியிடுகிறார்.

'ஆகாசத்தை நோக்கி அழுவன், தொழுவனே' என்றார் ஞான பூர்ணரான நம்மாழ்வார். மனக் கலக்கம் ஏற்பட்டால் அழுது தொழுது முறையிடவே, 'வான்தரு வள்ளல்' அணைத்துக் காப்பாற்றுவான் என்பது குறிப்பு.

வானத்தைப் பார்; அங்கே அருளுமில்லை; பொருளுமில்லை. உற்றுப் பார்த்தால், இல்லை என்பது தான் கொட்டையெழுத்திலே எழுதியிருக்கிறது, ஒரு வான மூலையிலிருந்து வேறொரு மூலைக்கு! இது விபரீத ஞானிகளின் விநோத முடிவு.

வானை நோக்கிப் பிரார்த்தனை செய்வதில் பயனில்லை என்றார் புத்தர் பெருமானும். 'பிரார்த்திக்க வேண்டாம்; அந்த வானத்திற்குக் காது கேட்காது!' என்றுதான் அருள் பொங்கிய புத்த இருதயமும் கருதியது.

ஆழ்வார் நாயன்மார் போன்ற அருளாளர்களோ 'வான் தரு வள்ளலை'க் கண்டு காட்டுகிறார்கள். அன்பர் உகந்த உருவம் தாங்கி அணைத்துக் காக்கும் வள்ளன்மையைக் காட்டுகிறார்கள். உக்கிர நரசிங்க ரூபம் போன்ற பயங்கர வடிவங்களில் தோன்றித் துஷ்ட நிக்கிரகம் செய்யும் 'வள்ளன்மை'யையும் காட்டுகிறார்கள்.

ஆழ்வார்களின் ஞான புத்திரனான கம்பனும் இரணிய வதம் செய்யும் வள்ளன்மையைச் சுட்டிக் காட்டுகிறான், துஷ்டர்களுக்கு எச்சரிக்கையாக;

வான்தரு வள்ளல்
வெள்ளை வள்ளுகிர்
வயிர மார்பின்
ஊன்றலும் உதிர
வெள்ளம் பரந்துளது!

[வள் உகிர் – கூரிய நகம்.]

இந்த நாடகத்தின் இறுதிக் காட்சியைக் கம்பன் காட்டும் பயங்கர விவரங்களுடன் பார்த்து விட வேண்டியது தான் :

ஆயவன் தன்னை
மாயன் அந்தியின்,
அவன்பொற் கோயில்

வாயிலில், மணிக்கு
வான்மேல், வயிரவாள்
உகிரின் வாயின்

மீயெழு குருதி
பொங்க, வெயில்விரி
வயிர மார்பு

தீயெழப் பிளந்து
நீக்கித் தேவர்தம்
இடுக்கண் தீர்த்தான்.

[மணிக்கவான் மேல் – அழகிய தொடையின் மேல் வைத்து. வயிர வாள் உகிரின் வாயின் – வஜ்ராயுதம் போன்ற கூரிய தனது நகங்களின் நுனியால். மீ எழு – மேலே எழுகின்ற. குருதி – இரத்தம்.]

இரணியனைக் கண்டு நடுங்கிக் கொண்டிருந்தவர்கள் இரணியனைக் கொன்று தீர்த்த நரசிங்கத்தைக் கண்டு நடு நடுங்குகிறார்களாம் :

நோக்கினர் நோக்கி
னார்முன், நோக்குறு
முகமும் கையும்


ஆக்கையும் தாளு
மாகி, எங்கணும்
தானே யாகி,

வாக்கினால், மனத்தி
னால்,மற்(று) அறிவினால்
அளக்க வாரா

மேக்குயர் சீயம்
தன்னைக் கண்டனர்
வெருவு கின்றார்!

[ஆக்கையும் – உடம்பும். தாளுமாகி – கால்களுமாகி. அளக்கவாரா – அளக்க முடியாத. மேக்குயர்–மேலோங்கி உயர்ந்துள்ள. சீயம் – சிங்கம்.]

இரணிய பயம் தீர்ந்தது. எனினும் தேவர்களுடைய பயம் இன்னும் தீரவில்லையே!



பீ. ஸ்ரீ.

22. அருள் சுரந்தது

'கடவுள் என்று ஒருவர் இருந்தால் காட்டு, பார்க்கலாம்' என்று கூறுவோர் என்றும் உண்டு. இரணியனும் இப்படித்தான் கேட்டான். ஆனால் கண்ட பலன் என்ன!

பக்குவம் இல்லாத நிலையில் காட்சி பயனற்றதே. கடவுளே தம்மைக் காட்டிக் கொண்டாலும் பார்க்கத் தெரிய வேண்டாமா!

பிரகலாதன் தானே சரியாகப் பார்த்துக் கொண்டான், அழுகையும் தொழுகையுமாகி, ஆடலும் பாடலுமாகி. இரணியனோ தன் கொடுமைக்கும் மேலான கொடுமை கண்டு அக் கொடுமைக்கே பலியாகி விட்டான்.

கண்டும் காணாத காட்சி

கொடுமை செய்யும் அசுர குணம் இல்லாதவர்கள் தாம் கண்ணால் காண முடியுமா பரம்பொருளை, — எல்லாப் பொருளுக்கும் உட்பொருளாகிய மெய்ப் பொருளை! அப்பொருள் தன்னை வெளியிட்டுக் கொண்டாலும் அந்த உருவத்தை யார் எந்தக் கண்ணால் கண்டு கொள்ள முடியும்!

தேவர்களெல்லாம் தேடிக் கொண்டிருக்கிறார்களாம் ஸாக்ஷாத் தர்மமாகிய கடவுளை — 'மேலொரு பொருளு மில்லா மெய்ப்பொருளை.' எத்தனை கண்கள் எங்கெல்லாம் துருவுகின்றன!

விலாசம் — முகவரி — தெரிய வில்லையாம். எந்த நாட்டில் புகுந்து எப்படி வசிக்கிறதோ பரம்பொருள்! தெரியாமல் திரிந்து கொண்டிருக்கிறார்களாம், தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும், திக்குத் தெரியாத காட்டிலே இலக்குத் தெரியாது தேடிக் கொண்டிருப்பவர்களைப் போல.

திடீரென்று விலாசம் தெரிந்து விடுகிறது — 'பூலோகத்திலே, காட்டில் அல்ல, இரணியன் வீட்டிலே, அரண்மனையின் அந்தத் தலைவாசற் படியிலே' என்பதாக. காட்டிலும் மேட்டிலும், விண்ணிலும் மண்ணிலும் தேடிக் கொண்டிருந்தவர்க ளெல்லாம் வந்து புகுந்து மொய்த்து விடுகிறார்கள்.

ஆனால் இந்த உக்கிர நரசிம்ம உருவத்தை — தருமம் இப்போது போட்டுக் கொண்டிருக்கும் இந்த அதி பயங்கர வேடத்தை எப்படித்தான் காண்பது! விலாசம் தெரிந்து விட்டது; விலாசக்காரனும் கண்ணெதிரே நிற்கிறான். எனும் காண முடியவில்லையாம்.

கண்களெல்லாம் மலர விழித்துக் கொண்டுதானிருந்தன. ஆனால் என் பரிதாபம்!

முக்கணான், எண்க
ணானும் முளரிஆ
யிரங்க ணானும்,

திக்கணாம் தேவ
ரோடும், முனிவரும்
பிறரும் தேடிப்

புக்கநா(டு) அறிகு
றாமல் திரிகின்றார்,
புகுந்து மொய்த்தார்;

'எக்கணால் காண்டும்
எந்தை உருவம்!' என்(று)
இரங்கி நின்றார்.



[முக்கணன் - மூன்று கண்களை யுடைய சிவபெருமான். எண்கணும் - எட்டுக் கண்களை யுடைய பிரமதேவனும். மூளரி ஆயிரம் கணும் - தாமரை மலர் போன்ற ஆயிரம் கண்களை யுடைய தேவேந்திரனும். திக்கணும் தேவரோடும் - திக்குக்களெல்லாம் கண்களாகப் பார்த்துக் கொண்டிருக்கும் தேவர்களும். புக்க நாடு - பரம்பொருள்சென்றிருக்கும் நாட்டை. அறிகுருமல் - அறிந்து கொள்ள முடியாமல். திரிகின்ருர்-திரிகின்றவர்களாய். எக்கணல் - எந்தக் கண்ணினல். காண்டும் - காண்போம். எந்தை உருவம்-அப்பனுகிய பரம்பொருளின் உருவத்தை. இரங்கி நின்ருர் - மனம் வருந்தி நின்று விட்டார்கள்.]

ஆயிரங் கண்ணுலும் தேவேந்திரனல் [க]ண முடியவில்லையாம். திக்கெல்லாம் [க]ண்ணுக, இமையாத கண்ணுக, நோக்கிக் [கொ]ண்டிருக்கும் தேவர்களாலும் காண முடியவில்லையாம்.

சிந்தனைகளெல்லாம் கண்களாகப் பார்க்கவல்ல முனிவர்களாலும் கண்டு கொள்ள முடியவில்லையாம். எண்ணிறந்த கற்பனைக் கண்களோடு கூடிய கவிஞர் முதலானவர்களாலும் காண முடியவில்லையாம்.

யாரை! - எதிரே நிற்கும் உக்கிர நரசிங்க ஜோதியைத்தான்!

கண்ணைக் கூசச் செய்யும் ஜோதி அதிகரிக்க அதிகரிக்க, ஜோதியும் இருட்டும் ஒன்றுதானே கண்களுக்கு! அந்த நிலை தான் இப்போது நரசிங்கப் பெருமானைக் காணும் தேவர்களுக்கும் பிறருக்கும்!

பக்குவம் பெருதவர்களுக்குப் பரஞ்சோதி எதிரே நின்ருலும் தெரிவதில்லை; பார்வை கூசிக் குலைந்து போகிறது, பார்க்க இயலாத மெய்ப்பொருளைப் பார்க்கும்போது. அவன் அருளே கண்ணுகக் காணப்பெறும் போது தான் காட்சி ஏற்படுகிறது.

அந்த மெய்ப் பொருளோ இப்போது எவ்வளவு கொடியதாக, பார்க்க முடியாத உக்கிர பயங்கரமாக,

பல்லொடு பல்லுக்(கு)
எல்லை ஆயிரக்
காதப் பத்தி
சொல்லிய வதனம்
கோடி கோடிமேல்
விளங்கித் தோன்ற,
எல்லையில் உருவிற்
ருகி இருந்தது!

[பல்லொடு பல்லுக்கு எல்லை - ஒரு பல்லோடு மற்ருெரு பல்லுக்கு இடையேயுள்ள இடம். பத்தி - தூரம். எல்லையில் உருவிற்ருகி - எல்லையில்லாத உருவமுடையதாய்.]

இதுவோ உன் புகழ்?

இந்த உருவத்தைத் தோத்திரம் செய்வது தான் எப்படி!

பேரை ஒருபொருட்கே
பல்வகையால் பேர்த்தென்றும்
தாரை நிலையை;
தமியை; பிறரில்லை;
ஆரைப் படைக்கின்ற(து)?
ஆரை அளிக்கின்ற(து)?
ஆரைத் துடைக்கின்ற(து)?
ஐயா, அறியோமால்!

[பொருட்கே – பொருளுக்கே. பேர்த்து – வேறுபடுத்து. தாரை – (இங்கே) நீரொழுக்கு; மழைத் தாரை. நிலையை – நிலைமை உடையாய். தமியை – தன்னந் தனியனாக இருக்கிறாய். அளிக்கின்றது – காப்பாற்றுகிறது. துடைக்கின்றது – அழிக்கிறது. அறியோம் – அறிகிறோமில்லை.]

என்று வினாக்களை அடுக்கித்தான் புகழ்மாலை சூட்ட வேண்டியிருக்கிறது, இந்தப் பயங்கர உண்மைக்கு, இந்தக் கொடிய தரும விதிக்கு!

'ஒன்றே பிரமம்; இரண்டில்லை' என்றும்; 'ஒன்றே மெய்ப்பொருள்; அறிஞர் பல்வகையால் பேசுகின்றார்' என்றும் வேதமுரசு கொட்டி முழக்குகிறதே, அந்தக் கொட்டோசைக்குத்தான் எத்தகைய கலையுருவம் கிடைத்திருக்கிறது, மேலே காட்டிய செய்யுளில்!

ஒரே பொருள்; பேர்கள் பல. இந்த நிலை 'தாரை நிலை' எனக் குறிக்கப்படுகிறது.

ஸ்தூலமாகப் பார்த்தால் 'ஒழுங்கான நிலை' என்று பொருள். அதாவது, 'நீரொழுக்கைப் போன்ற ஒழுங்கு'.

ஆழ்ந்து பார்த்துப் பொருள் கண்டுபிடிப்பதும் நலமாகும். மழைத் தாரையாகிய நீரொழுக்கின் நிலை என்ன?

'காரென்று பேர் படைத்தாய்...' என்று வேடிக்கையான ஒரு பாட்டு இருக்கிறதல்லவா! வானத்திலே கார் அல்லது மேகம் என்று பெயர்; நிலத்திலே விழும்போது நீர் என்று பெயர்; மோர்க்காரியின் சட்டியிலே அந்தக் கைவளத்தால் மோர் என்று பெயர்!— இது இந்த நகைச்சுவைப் பாட்டின் பொருள். 'மோர் நிலை' பாடும் இப்பாட்டின் பொருளைக் கம்பன் பாட்டி



ளுள்ள 'தாரைநிலை'க்கும் பயன் படுத்திப் பார்க்கலாம்.

விண்ணிலே மேகம்; கீழே இறங்கும் போது மழைத் தாரை; மண்ணிலே நீர், ஓடை, ஆறு, கடல் — கங்காதீர்த்தம், சாக்கடைத் தண்ணீர், மோர்நீர் எல்லாம்! இறைநிலையும் இது என்பது போல அமைந்திருக்கிறது.

பேரை ஒருபொருட்கே
பல்வகையால் பேர்த்தென்
தாரை நிலையை! [னும்

என்ற வாக்கு.

இந்த நிலையிலுள்ள பரம்பொருளைத் 'தமியை; பிறரில்லை' என்று குறிப்பிடுவதில், கம்பன் வேதப் பொருளேயன்றி வேத மொழியையும் பொன் போல் போற்றுகிறானென்பது தெளிவு.

தன்னினும் வேறான பொருள் யாதுமில்லையென்று சொல்லும்படி உலக முழுவதும் தனது சொரூபமேயாகி நிற்கும்போது மூன்று ஐயப்பாடுகள் தோன்றுகின்றனவாம்: (1) யார் யாரைப் படைக்கிறது? (2) யார் யாரைக் காப்பாற்றுகிறது? (3) யார் யாரை அழிக்கிறது?

'இரணியனை அழித்து விட்டாயே: உன்னினும் வேறான பொருள் இல்லையென்றால் உன்னையே நீ அழித்துக் கொண்டதாகத்தானே அர்த்தம்—அறிகின்றோமில்லையே!' என்று உக்கிர நரசிங்கத்தை நோக்கி பிரமதேவன் வாயிலாகக் கவிஞன் கேட்கும் கேள்வியும் எவ்வளவு உக்கிரமாயிருக்கிறது!

படைப்புக் கடவுளே 'அறியோம்!' என்று அலறும்போது, அறிந்தவர் யார்? அறியாதவர் யார்?

இத்தகைய வினாக்களுடன், 'உலகம் முழுவதும் உனது சொரூபமே!' என்று சித்தாந்தம் செய்கிறான் பிரமதேவன். இத்தகைய கடவுளிடத்திலே அண்டங்கள் பனிக்கடலில் தோன்றும் நீர்க்குமிழிகள் போலத் தோன்றுகின்றனவாம்:

பல்லா யிரகோடி
அண்டம் பனிக்கடலுள்
நில்லாத மொக்குள்ளனத்
தோன்றுமால் நின்உழையே!

[மொக்குள் – நீர்க் குமிழி. நின்உழையே – உன்னிடத்தில்.]

பல்லாயிர கோடி நீர்க்குமிழிகளிடையே பயங்கரமாகச் சுழித்து மறைந்து விட்டது இரணியன் ஆட்சியும்!

இப்படிப் புகழ்ந்தபின் பிரமன் முதலியோர் வணங்குகிறார்கள். வணங்கவே உக்கிர நரசிங்கப் பெருமானும்,

ஒன்றாத சீற்றத்தை
உள்ளே ஒடுக்கினான்!

[ஒன்றாத – பொருந்தாத.]

கடவுள் என்ற பேரருளுக்குப் பொருத்தமில்லாத சீற்றம் என்பது குறிப்பு. இந்தச் சீற்றமும் அவன் அருளே என்பது நம்மாழ்வாரைப் போன்ற ஞான பூர்ணர்களின் கொள்கை.

கடவுளுடைய அறக் கருணைக்குத் தம்மைச் சாட்சியாகவும், மறக் கருணைக்கு இரணியனைச் சாட்சியாகவும் காட்டுகிறார் ஆழ்வார். எப்படியும் கருணை கருணைதானே!

தழலிலே தாமரை

எனினும், மறக்கருணை தேவர்களையும் பயமுறுத்தி விடுகிறது. சீற்றம் உள்ளே ஒடுங்கிய போதிலும், 'உலகங்களெல்லாம் இப்பொழுதே அழிந்து விடும்!' என்று தேவர்களின் நெஞ்சு நடுங்குகிறதாம்.

சிங்கத்தின் பயங்கர நோக்கு அருள் நோக்கமாகிறது, அந்த உருவத்திலே இனித்து,

அப்புறத்து அண்டம்
தோறும் தடவின
சிலகை அம்மா!

என்றவாறு பயமுறுத்திய கைகள் பெரும்பாலும் மறைந்து விட்டன.

நெஞ்சு படபடக்கும் தேவர்களையும், அருள் நோக்குடன் அபய தானம் செய்யும் சிங்கப்பெருமானையும் இதோ பாருங்கள்:

'எஞ்சும் உலகனைத்தும்
இப்பொழுதே!' என்றென்று
நெஞ்சு நடுங்கும்
நெடுந்தே வரைநோக்கி,
'அஞ்சன்மின்' என்னா
அருள்சுரந்த நோக்கினால்
கஞ்ச மலர்ப்பழிக்கும்
கைஅபயம் காட்டினான்

[எஞ்சும் – அழிந்து விடும். அஞ்சன்மின் – அஞ்சாதேயுங்கள். என்னா – என்று. கஞ்ச மலர் பழிக்கும் – தாமரை மலரைக் கீழ்ப்படுத்தும்படியான.]

கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்



சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

23. அழகு வந்தது

(லட்சுமி நரசிம்மன்)

'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்றும், 'வலிமையே உரிமை' என்றும் நம்பியிருந்த இரணியன், தன் சர்வாதிகாரத்திலேயே நம்பிக்கை யுள்ளவனாய், எல்லாருக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு ஸர்வேச்வரன் இருக்க முடியாதென்றே நம்பினான். ஸர்வாந்தர்யாமியான ஸர்வேச்வரன் இருக்கவே முடியாது.

கோழைகள், ஏழைகள், வஞ்சகரான பலவீனர் செய்த கற்பனை இது. அல்லது இவர்களை ஏமாற்றச் சூழ்ச்சிக்காரர் செய்துவைத்த கற்பனை. இது இரணியன் மதம். இப்பேர்ப்பட்ட சர்வாதிகாரி தன்னையே ஸர்வேச்வரனாக நம்பத் தொடங்கினான்; நியமித்துக் கொண்டான்.

வணங்கத்தக்க ஈச்வர ஸந்நிதியிலும் பெரியோர் சந்நிதியிலும் வணங்காத தலையன், முதுமையால் முதுகு கூனிப் போகத் தன் அடிகளையே நோக்கி வளைந்து வணங்குவது போலக் காணப்படுவதுண்டல்லவா! ஒருவகை 'இயற்கைத் தண்டனை'யை இரணியனும் பெற்று விட்டான். எனவேதான் 'ஹிரண்யாய நம:' என்று பிறரைச் சொல்ல வைத்தவன் 'என் வாளினைத் தொழுவேன்!' என்றான்.

எந்த நாராயண நாமத்தைக் கடவுளின் திருநாமம் என்று பிரகலாதன் சொல்லி வந்தானோ, அந்த நாராயணனைத் தன் குலப் பகைவனாக இரணியன் கருதியதால் நாராயணன் ஒருவன் உண்டு என்பதை இரணியனும் நம்பினான் எனலாம். ஆனால் அந்த நாராயணன் கடவுள் என்று இரணியன் ஒப்புக்கொள்ளவில்லை.

அவன் தனக்குப் பயந்து தோற்றுப் போய் ஒளித்துக் கொண்டிருப்பதாகவும் கருதினான். அவனைப் பிடித்துப் பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற ஆத்திரமும் இரணியனுக்கு உண்டு.

ஒரு பின்னோக்கு

இந்த நிலையில் தூணிலே கையால் அறையவும் சிங்கப்பிரான் தோன்றினான்:

திசைதிறந்து அண்டம்கீறிச்
சிரித்தது செங்கட் சீயம்.

சிரிப்பொலிதான் இரணியன் கேட்டது; சிங்க கர்ஜனை யல்ல. சிங்கத்தையோ அதன் சிவந்த கண்களையோ இரணியன் பார்க்கவில்லை. 'செங்கண்சீயம்' என்பது கவிக்கூற்று;– கதை முழுதும் தெரிந்த விபீஷணன் கூற்று.

தூண் கீறியதே இன்னும் தெரியவில்லை, சீறிக் கொண்டிருக்கும் இரணியனுக்கு. சிரிப்பொலியின் அதிர்ச்சியிலே 'திசை திறந்து அண்டம் கீறியது' போலவே தோன்றியது. சிங்கத்தை இரணியனும் பார்க்கவில்லை; பிரகலாதனும் பார்க்கவில்லை.

சிரிப்பொலி கேட்டதும் பிரகலாதன் ஆனந்த பரவசமானான்; ஒலி வந்த திசை நோக்கி வணங்கினான். 'கடவுள் தூணிலும் இருக்கிறான்; துரும்பிலும் இருக்கிறான்' என்ற உண்மைக்குச் சான்று கிடைத்து விட்டது என்ற உணர்ச்சிதான் இந்தப் பரவச நிலைக்குக் காரணம்.

சிரித்தது கேட்டுப் பிரகலாதன், பக்தி பெருக அழுகையும் தொழுகையுமானான். இரணியனோ ஆணவம் பொங்க,

ஆரடா சிரித்தாய் ?
சொன்ன அரிகொலோ ?

என்று அதட்டினான். இப்படி அதட்டும் போதும் இவன் சிங்க ரூபத்தைப் பார்த்து விட வில்லை.

'திசை திறவில்லை: தூண்தான் தெறியது' என்பது தெரிவதற்கு முன்பே யாரோ சிரிப்பது காதில் விழுந்து விட்டது. நம் குலப் பகைவனான ஹரி தானோ!—அஞ்சிக் கடலில் ஒளித்துக் கொண்டிருக்கிறான் என்று நாம் நினைத்திருந்தோமே அந்த நாராயணன் தானோ! இந்தக் கேள்வி கேட்கும் போதும் இரணியன் சிங்கத்தைப் பார்த்துவிடவில்லை யென்ற ஊகமே பொருத்தமானது.

'போரடா பொருதியாயின் புறப்படு புறப்படு!' என்று இரணியன் அவசரப் படுத்தியபோதும், ஆர்ப்பாட்டம் செய்தபோதும், நரசிங்கமூர்த்தி அப்படியொன்றும் ஆத்திரமாகத் தூணைப் பிளந்து கொண்டு புறப்பட்டு விட்டதாகத் தோன்றவில்லை. அடித்த அடியின் இடி வேகத்திற்கும் இரணிய ஆரவார கர்ஜனைக்கும் இடையே ஒரு சிரிப்பு–இடிச் சிரிப்பு—இரணியன் சிரிப்பிற்கு எதிர்ச்சிரிப்பு; அவ்வளவேதான்!

சிங்கமும் அவசரப் படவில்லை: 'தூணும் நிதானமாய்ப் பிளக்கிறது; பிளந்து தெறிக்கொண்டே போகிறது' என்று தோன்றும்படியாகக் கம்பனின் நாடகத் திறன் அமைத்திருக்கிறது கதைப் போக்கை.

பிளந்தது தூணும்;
ஆங்கே பிறந்தது
சீயம்; பின்னை
வளர்ந்தது......

என்று, தூணிலே கர்ப்பவாசம் செய்து சிங்கப்பிள்ளை நிதானமாய்ப் பிறந்து அதி வேகமாய் வளர்வது போல அமைத்திருக்கும் கவிதைக் காட்சியைப் பாருங்கள்.

இப்போதுதான் சிங்கத்தைப் பார்க்கிறான் இரணியன்,—இப்படிப் பிறந்து வளரும் நிலையிலே.

கவிஞனது இந்தக் காட்சி — அமைப்புத்திறனை நான் முதன் முதல் உணர்ந்து கொள்ளத் தவறிவிட்டேன்; நுண்ணறிவாளரான சிறுகதைப் பேராசிரியர் ஒருவர் காட்டவே கண்டு கொண்டேன்.

சிங்கத்தின் விசுவரூப வளர்ச்சியும், அசுரவர்க்க நாசமும், இரணியனுடன் போராட்டமும், இரணிய வதையும் எல்லாம் படுவேகமாய் நிகழும் நிகழ்ச்சிகள். அசுரவர்க்கம் அழிந்தும் அசுரர்கோன் ஒழிந்தும் சீற்றத்தின் வேகம் தணிந்த பாடில்லை.

துஷ்டர்களைப் பயமுறுத்திய அந்தச் சிவந்த கண்கள் தேவர்களையும் பயமுறுத்தி விட்டன. அதர்மத்தைப் பிளக்க விழுந்த இடி தர்மத்தையும் தவிடு பொடியாக்கி விடுமோ எனத் தோன்றியது.

சிங்கம் அருள்சுரந்து நோக்கிய போதிலும், அந்தக் கண்ணருள் தெரியவில்லை, மருண்டு இருண்டு போயிருந்த கண்களுக்கு. அபயம் காட்டியும் பயம் தீரவில்லை. காரணம் என்ன?

பிரமன் முதலியோர் ஆலோசித்துப் பார்த்தார்கள். பிராட்டி இல்லாத பிரானிடம் சுரந்த அருள் துலங்குவதுதான் எப்படி? மன்னிக்கவும் அருள் செய்யவும் தாயுள்ளம் வேண்டுமே!

அன்னை வருகை

தாயாகிய பிராட்டியைப் பிரார்த்தித்து அனுப்பி வைக்கிறார்கள்:

பூவில் திருவை,
அழகின் புனைகலத்தை,
யாவர்க்கும் செல்வத்தை,
விடென்னும் இன்பத்தை,
ஆவித்துணையை,
அமிழ்திற் பிறந்தாளைத்
தேவர்க்கும் தம்மோயை
ஏவினார் பால்செல்ல.

[பூவில் திருவை — செர்தாமரைப் பூவில் வாழ்கின்ற திருமகளை. புனைகலத்தை — ஆபரணத்தை. வீடு—பரம பதம். அமிழ்திற் பிறந்தாளை – அமிர்தத்துடனே பிறந்தவளை. தேவர்க்கும் தம்ஓயை – தேவர்களுக்கும் பெற்று வளர்க்கும் தாய் போன்றவளை. பால் செல்ல — சிங்கப்பிரான் அருகில் செல்லுமாறு.]

இந்த லட்சுமி வருணனையோடு அடுத்த பாட்டில் வரும் வருணனையையும், அருகில் வந்த திருமாமகளை நரசிங்கப் பெருமான் நோக்குகின்ற அந்த நோக்கையும் பாருங்கள்:



செந்தா மரைமலர்மேல்
செம்மாந்து வீற்றிருக்கும்

நந்தா விளக்கை,
நறுந்தார் இளங்கொழுந்தை,

முந்தா உலகும்
உயிரும் முறைமுறையே

தந்தானை நோக்கினன்,
தன்ஒப்பொன் றில்லாதான்.

[செம்மாந்து – மிக்க களிப்புடன். நந்தா விளக்கை – தூண்டா விளக்குப் போன்ற சுயம்பிரகாச ஜோதியை. நறுந் தார்.இளங் கொழுந்தை – பரிமளம் தங் கிய பூமாலையிலுள்ள இளங் கொழுந்து போன்றவளை. முந்தா – ஆதியில்.]

இது கம்பனது லட்சுமி சித்திரம். இந் தக் கற்பனைக்கு இசைந்தவாறு ஓவியப் புலவர்கள் திருமாமகளைச் செந்தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் ஜோதி சொரூப முடையவளாகச் சித்திரிக்க முயல வேண்டும்.

ஸ்தூலமாக ஒரு பெண் செந் தாமரைப் பூமீது அந்தப் பூவை நசுக்கி விடாமல் நிற்பது போலக் காட்டுவதில் விசேஷமான கலைத் திறன் இல்லையென் பது, டாக்டர் ஆனந்த குமாரசுவாமி போன்ற கலா ரஸிகர்களின் தேர்ந்த கொள்கை.

கடாட்சம் தந்த அருள்

தாயும் தந்தையுமாகக் காட்சி வழங்குகிறான் இறைவன் இப்போது —

திருமகளுடன் திருமாலாக. இப்படி அழகு வந்ததும், சுரந்த அருளும் இனிது புலனுகி விட்டது முனிவர்க்கும் பிறர்க்கும் :

தீதிலா வாக
உலகீன்ற தெய்வத்தைக்
காதலால் நோக்கினுன் ;
கண்ட முனிக்கணங்கள்
ஓதினுர் சீர்த்தி ;
உயர்ந்த பரஞ்சுடரும்
நோதல்ஆங்(கு) இல்லாத
அன்பனையே நோக்கினுன்.

[தீதிலாவாக — தீமைகள் இல்லாதன ஆகுமாறு. உலகு ஈன்ற—உலகத்தைப் பெற்றெடுத்த. முனிக்கணங்கள்—முனிவர் கூட்டத்தார். சீர்த்தி—சிறந்த புகழ். நோதல் ஆங்கு இல்லாத—அப்பொழுது வருந்துதல் இல்லாத.]

கோபத்தால் சிவந்திருந்த கண்கள் இப்போது காதலாகிக் கசிந்து சிவக்கின்றன. இப்போதுதான் பயம் முற்றும் நீங்குகிறது முனிக் கணங்களுக்கும் தேவர்களுக்கும். காதலால் சிவந்த கண்கள் விசேஷமாகக் கடாட்சிக்கின்றன பிரகலாதனை.

உக்கிர நரசிம்மம் லட்சுமி நரசிம்மமாகி விட்டதல்லவா ! இந்த நிலையில் பிரகலாதனை நோக்கிச் சொல்லும் வார்த்தை இது :

'உந்தையை உன்எதிரே
யான்கொன்(று) உயிர்அளையச்
சிந்தை தளரா(து)
அறம் பிழையாச் செய்கை
யாய்,
அந்தமிலா அன்பென்மேல்
வைத்தாய்; அளியத்தாய்
எந்தை! இனி இதற்குக்
கைம்மாறு யா(து)?' என்
ருன்.

[உந்தையை—உன் தந்தையை. செய்கையாய் – செய்கை உடையவனுய், அளியத்தாய்—அருள் செய்யத் தக்கவனே, எந்தை—என் அப்பனே. கைம்மாறு-எதிர் உதவி.]

அன்பு மிகுதியால் தந்தை தன் குழந்தையை 'என் அப்பனே !'என்றுஅழைப்பதுண்டல்லவா ? அத்தகைய அன்புடன் 'இந்த அன்பனுக்கு என்ன செய்வோம்!' என்று இரங்குகிறது ஸ்ரீ லட்சுமிநரசிம்மனின் திருவுள்ளம்,

இந்த உள்ளத்திலிருந்து மேலும் புறப்படுகின்றது அருளுரை :

அயிரா இமைப்பினை
ஆயிரம் கூறிட்ட
செயிரின் ஒருபொழுதின்
உந்தையை யாம்சீறி
உயிர்தேடு வேம்போல்
உடல்அளையக் கண்டும்
செயிர்சேரா உள்ளத்தாய்க்(கு)
என் இனி யாம்செய்கேம்?

[அயிரா—நுட்பமாக. இமைப்பினை – மாத்திரைப் பொழுதை. செயிரின் ஒரு பொழுதின் — ஒரு பகுப்பான சிறிது பொழுதில். உயிர் தேடுவேம்போல் – உயிரைத் தேடுவதுபோல. செயிர் சேரா உள்ளத்தாய்க்கு — கோபமோ, துன்பமோ சேராத பக்தியுள்ளம் வாய்ந்த உனக்கு. என் – என்ன. செய்கேம் – செய்வோம்.]

கடைசியாக நரசிங்கமூர்த்தி, 'நான் உனக்கு என்ன செய்வேன் ! வேண்டிய வரத்தைக் கூச்சமில்லாமல் விரைவில் பெற்றுக் கொள்வாய்' என்று கூறியருளுகின்றுன்.

பிரகலாதன் வேண்டுகின்ற வரம். இலக்கியப் பிரசித்தியும் சமய உலகப் பிரசித்தியும் வாய்ந்த செய்யுள் வடிவம் பெற்றிருக்கிறது ;

'முன்பு பெறப்பெற்ற
பேருே முடிவில்லை ;
பின்பு பெறும்பேறும்
உண்டோ ? பெறுவேனேல்,
என்பு பெருத
இழிபிறவி எய்திடினும்
அன்பு பெறுகை
அரும்பே(று) எனக்(கு)'
என்ருன்

[என்பு பெருத இழி பிறவி – எலும்பு இல்லாத இழிந்த பிறப்பாகிய புழு ஜன்மத்தை.]

பிரகலாதனை முதன் முதல் அறிமுகப் படுத்தும்போது கவிஞன்,

தாயின் மன்னுயிர்க்கு
அன்பினன் உளன்ஒரு
தக்கோன்

என்று சிறப்பித்ததை இப்போது நாம் நினைவிற்குக் கொண்டுவர வேண்டும்.



கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம்

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ

24. பிரகலாத பட்டாபிஷேகம்

(அடிசூடி முடிசூடியது)

'வேண்டும் வரம் கேள்; இந்த அன்பிற்குக் கைம்மாறு யாது?' என்று நரசிங்க மூர்த்தி கேட்க, 'அன்பு பெறுகையே கைம்மாறு' என்று அன்பனும் வரம் வேண்டினன்.

வரம் அருளும் வைபவம்

வரம் கொடுக்கும் தெய்வம் 'தந்தோம்' என்று பொருள் படச் சுருங்கச் சொல்லி வரம் கொடுத்தால் போதுமே. ஆனால், நரசிங்கமூர்த்தி பிரகலாதனுக்கு வரம் தருவது நான்கு பாடல்களை நிரப்பி யுள்ளது.

'நீ வேண்டுகின்ற வரம் தந்தோம்' என்று சொல்லாமலே, 'நீ சிரஞ்சீவியாகத் திகழ்வாய்' என்கிறான் சிங்கப் பிரான். 'தேவர்க்கும் இறைவனுய்த்தெய்வத்திற்குச் சமமாக விளங்குவாய்' என்றும் வரம் அருளுகிறான்.

வரம் கொடுப்பதை முதன் முதல் ஒரு பாட்டில் முடித்து விட்டுத் திருப்தி பெறுமல் மீண்டும் மூன்று பாடல்களில் பேசுவது போல் அமைந்திருக்கிறது, இந்த வரம் அருளும் கட்டம்.

இனி, இதன் முதலாவது செய்யுளை நோக்குவோம் :

அன்னானை நோக்கி
  அருள்சுரந்த நெஞ்சினனாய்,
'என்ஆனை வல்லன் !'
  எனமகிழ்ந்த பேரீசன்,
'முன்னான பூதங்கள்
  யாவையும் முற்றிடினும்
உன்நாள் உலவாய்நீ;
  என்போல் உளை !' என்றான்.

[அன்னானை – அந்தப் பிரகலாதனை. என் ஆனை – அருமை பாராட்டிக் குறிப்பிடும் ஆசை மொழி. முன்னான–பழமையான. முற்றிடினும்–அழிந்தாலும். உன் நாள் உலவாய்–உன் வாழ்நாள் அழியாமல். என்போல் உளை–என்னைப் போல் எந்நாளும் உள்ளவனாவாய்.]

இது முதன் முதல் இறைவன் பிரகலாதனுக்குச் சூட்டும் சிரஞ்சீவிப் பட்டம். பிரகலாதன் என்ற அன்பு வடிவத்திற்குச் சாவு ஏது! பிரகலாத பக்திக்கு முன் செத்துப் போவது சாவு தான்!

இப்படி வரம் கொடுத்தும் திருப்தி அடையாதது போல், மேன்மேலும் அருள்சுரந்த நெஞ்சினனாய்ச் சிங்கப்பெருமான் காதல் – நோக்கு நோக்குகிறான் பிரகலாதனை. இந்த நிலையில் பகவானை நோக்குகிற பிரகலாதன், பரம தேஜஸ்வியாக விளங்குகிறான்.

மின்னலை மறைந்து போக விடாமல் பிடித்துச் சிறைப் படுத்தி வைத்தாற் போல் ஜொலிக்கிறதாம் இந்தத் தேஜஸ்வியின் எழிலுருவம்.

இந்த அன்பழகைக் காதலித்துப் பேசுவது போல் பேசுகிறான் பகவான் :

மின்னைத் தொழுவளைத்த(து)
  அன்ன மிளிர்ஒளியாய்!
முன்னைத் தொழும்(பு) உனக்கே
  யாமன்றோ மூவுலகும்?

என்னைத் தொழுதேத்தி
எய்தும் பயன்எய்தி

உன்னைத் தொழுதேத்தி
உய்க உலகெல்லாம்!

[மின் - மின்னல். தொழு - சிறை. தொழு வளைத்தது அன்ன-சிறைப்படுத்தியது போன்ற. மிளிர் ஒளியாய்-மிளிர்கின்ற ஒளியை உடையவனே. முன்னைத் தொழும்பு - பழமையான அடிமை. ஆமன்றே-ஆகுமல்லவா. உய்க—வாழ்க.]

பிரகலாதனை ஒத்த அன்பிற்கு எல்லாம் அடக்கம்தான்; அடிமைதான்! இத்தகைய பக்தனும் பகவானைப் போல் தொழுகைக்கு உரியவன்.

பகவானை நேரில் தொழுவதைக் காட்டிலும் பக்தர் வாயிலாகத் தொழுவது எளிது, சிறந்தது என்றும் கருதலாம்.

ஈசன் என்ற மாசற்ற ஜோதியை நோக்கக் கூசுகின்ற கண், மாசற்ற அன்பருள்ளத்தின் வாயிலாக அந்த ஜோதியைக் கூசாது கண்டு கொள்ளலாம் அல்லவா!

வேறொன்றும் வேண்டாது அன்பையே வேண்டுவோர், உலகனைத்தும் ஆளுவர் என்பதை மேலும் வற்புறுத்துகிறுன் சிங்கப்பிரான்:

ஏனவர்க்கு வேண்டின்
எளிதொன்றே? எற்(கு)
அன்பர்
ஆனவர்க்கும் எல்லாம்
உனக்கன்பர் ஆயினர்;
தானவர்க்கு வேந்தன் நீ
என்னும் தரத்தாயோ?
வானவர்க்கும் நீயே
இறைவன் மறைவல்லாய்!

[ஏனவர்க்கு-மற்றையோர்க்கு. வேண்டின் - விரும்பினல். எளிதொன்றே - பெறுவதற்கு எளியதொரு பொருளாகுமோ. எற்கு அன்பர் ஆனவர்க்கெல்லாம்-எனக்கு அன்பர்களான எல்லாவர்க்கத்தினரும். தரத்தாயோ - தரத்தைத்தான் உடையவனு யிருக்கிறுயோ. இறைவன்-(இங்கே) தலைவன். மறைவல்லாய்-வேதங்களில் வல்லவனே; வேதங்களை ஓதாது அவற்றில் வல்லவனுகிவிட்டவனே.]

அன்பின் ஆட்சி—பக்தியின் மாட்சி—மண்ணோடு விண்ணிலும் படர்ந்து செல்கிறதாம். மண்ணவர் விண்ணவர் மட்டுமல்ல, நல்லறம் முதலியனவும் பணி



செய்ய வேண்டியது தான் அன்பின் சந்நிதியிலே! ஞானமும் அன்பின் ஆணைக்கு உட்படுகிறதாம்.

எனவே, பகவானை வளர்கின்றுனும் பக்தன். இது வரத்தின் சிகரம்:

நல்லறமும் மெய்ம்மையும்
நான்மறையும் நல்லருளும்
எல்லையிலா ஞானமும்
ஈறிலா எப்பொருளும்
தொல்லைசால் எண்குணமும்
நின்சொல் தொழில்செய்க;
வல்ல உருஒளியாய்!
நானு வளர்க நீ!

[நான்மறை—நாலு வேதங்கள். ஈறிலா—முடிவில்லாத. தொல்லை சால் - பழமை மிக்க. எண் குணமும்-எட்டுக் குணங்க



ளும். நின் சொல் தொழில் செய்க — உன் சொற்படி தொழில் செய்யக் கடவன. வல்ல உரு ஒளியாய் — சிறந்த ரூப சௌந்தரியம் உள்ளவனே. நாளு வளர்க — நாளுக வளர்வாயாக.]

பகவானுக்கும் பக்தனுக்கும் வேற்றுமை இல்லையென்று சொல்லுமாறு பக்தன் வளர வேண்டுமென்பது பகவானது ஆசி.

இயற்கையுணர்வு, முற்றும் உணர்தல், முடிவில்லாத இன்பம், முடிவில்லாத சக்தி, பேரருள், பாச நீக்கம், தூய உருவம் என்றெல்லாம் இறைவனுடைய குணங்களை வருணிப்பதுண்டு. பகவானுடைய கல்யாண குணங்கள், பக்தனுக்கும் உரிய குணங்களாகி அணி செய்கின்றன என்பது குறிப்பு.

'நாளு வளர்க நீ!' — 'எந்தத் தெய்வம் தான் எந்தக் காவியத்திலே இப்படிப் பக்தனுக்கு வரம் கொடுத்திருக்கிறது!' என்று நினைக்குமாறு முற்றுப் பெறுகின்றது, வரம் அருளுகின்ற கட்டம்.

தெய்வமாக வளர்ந்து கொண்டேயிருப்பது தான் பக்தனுக்குரிய சிரஞ்சீவிப் பட்டம். பகவான் என்ற மெய்யொளி வளர்ந்து கொண்டேயிருக்கிறதாம், பக்தன் என்ற மெய்யன்பை 'வளர்க, வளர்க' என்று வாழ்த்திக்கொண்டே. அன்பின் ஒளி இல்லையென்றால், சத்திய ஒளி தான் ஏது?

'அன்பு பெறுகை அரும் பேறு' என்ற பிரகலாதனது பிரார்த்தனையே தனிச்சிறப்பு வாய்ந்தது. சிங்கப்பிரானின் அனுக்கிரகச் சிறப்பை என்னென்பது!

முடிசூட்டு வைபவம்

தேவர்களை நோக்கி இந்தச் சிங்கப் பெருமான், 'பிரகலாதனுக்கு முடிசூட்ட வேணும்; அதற்கு இசைந்த செயலைச் செய்யுங்கள்' என்று கட்டளையிடுகிறான்:

என்று வரம்அருளி,
'எவ்வுலகும் கைகூப்ப,
முன்றில் முரசம்
முழங்க, முடிசூட்டி
நின்ற அமரர்
அனைவிரும் நேர்ந்(து)
இவனுக்கு
ஒன்று பெருமை
உரிமை புரிகெ'ன்றான்.

[முன்றில் — அரண்மனை வாசலில். முரசம் — முரச வாத்தியங்கள். நின்ற — (இங்கே) நிற்கின்ற தேவர்கள். நேர்ந்து — மனம் இசைந்து. ஒன்று பெருமை உரிமை — பொருந்திய பெருமைக்கு உரியனவற்றை. புரிக என்றான் — செய்வீராக என்று கட்டளையிட்டான்.]

தேவர்கள், தெய்வ நியமனத்திற்கு இணங்க உரிய செயல்களைச் செய்கிறார்கள். பிரம தேவனே புரோகிதனாக அமர்ந்து வைதிகச்சடங்கு செய்கிறான்.

இந்த நிலையில் முடி சூட்டுவது யார்? முடி சூட்டும் உரிமை, தகுதி, யாருக்குத் தான் உண்டு!

தேமன் உரிமை
புரியத் திசைமுகத்தோன்
ஓமம் இயற்ற,
உடையான் முடிசூட்டக்
கோமன் எவனாகி
மூவுலகும் கைக்கொண்டான்,
நாம மறைஓதா(து)
ஓதி நனிஉயர்ந்தான்.

[தேமன் – தேவர்களின் அரசனான தேவேந்திரனும். உரிமை புரிய – குற்றேவல்களைச் செய்ய. திசை முகத்தோன் – பிரம தேவன். உடையான் – உடையவனான நரசிங்கமூர்த்தி. கோமன் எவனாகி – சக்கரவர்த்தியாகி. நாம மறை – பிரசித்தி பெற்ற வேதங்களை. நனி உயர்ந்தான் – சிறப்பாக உயர்ந்த பிரகலாதன்.]

அடி சூடுவதையே அரசாக எண்ணியிருந்த பிரகலாதனுக்கு, முடி சூடும் அரசும் கிடைத்து விடுகிறது.

ஒன்றுமே வேண்டா(து)
உலகனைத்தும் ஆளுவர்காண்!

என்று புதுமைக் கவி பாரதி போற்றும் பக்த கணங்களின் தலைவனல்லவா!

பிரகலாத பட்டாபிஷேகத்தோடு முடிவுபெறுகிறது, கம்பன் பாடிய பிரகலாத சரித்திரம். விபீஷணன் ராவணனுக்குச் சொல்லி வருகிறான் என்ற நினைவில்லாமலே நாமும் கதை கேட்கிறோம்.

ஆம்; இப்படித்தான் இந்தக் கதையைக் கம்பன் அமைத்திருக்கிறான், இப்படலத்தின் முதலாவது செய்யுள் தொடங்கி இறுதிச் செய்யுளுக்கு முற்பட்ட இந்த முடிசூட்டு வைபவச் செய்யுள் வரை.

இறுதிச் செய்யுள் தான், விபீஷணன் ராவணனை நோக்கிக் கதை சொன்னதாகக் கூறி முடிக்கிறது:

ஈதாகும் முன் நிகழ்ந்த(து);
எம்பெருமான்! என்உரையை
யாதானு மாக
நினையா(து) இகழுதியேல்
தீதாய் விளைதல்
திடமென்னச் செப்பினான்,
மேதாவி கட்கெல்லாம்
மேலான மேன்மையான்.

[எம்பெருமான் – எங்கள் தலைவனே. யாதானுமாக நினையாது – கொஞ்சமும் நினைத்துப் பாராமல், இகழுதியேல் – இகழ்வாயானால்.]

'மறை ஓதாது ஓதி நனி உயர்ந்தான்' என்று கவிஞன் பிரகலாத சரித்திரத்தைப் பாடி முடித்திருக்க வேண்டும். கம்பராமாயணம் பாடி வந்து யுத்த காண்டத்திலே விபீஷணன் வாக்காக இக்கதையைச் சேர்த்து வைக்கலாமென்று தீர்மானித்ததும், ராவணனுக்குத் தான் சொல்லி வந்த கதையை விபீஷணன் முடித்ததாக ஒரு செய்யுளைச் சேர்த்து இப்படலத்தை முடித்திருக்க வேண்டும்.

முந்திய செய்யுளில் பிரகலாதனை 'மறை ஓதாது ஓதி நனி உயர்ந்தான்' என்று சிறப்பித்ததற்கு இசைவாக விபீஷணனையும்,

மேதாவி கட்கெல்லாம்
மேலான மேன்மையான்

என்று சிறப்பித்துப் பிரகலாதனுக்குச் சமானனாகக் காட்ட முயல்கிறான்,

* * *

இரணியனையும் நரசிங்கத்தையும் உபமானமாகக் காட்டும் சில பாடல்கள் கம்பராமாயணப் பரப்பிலே அங்கு மிங்கும் காணப்படுகின்றன. ஏற்கெனவே பாடி வைத்திருந்த கதையின் நினைவுக் குறிகள் அவை எனக் கருதலாம்,

இத்தகைய நினைவுகளுடன் திருப்தி அடையாமல் தான் ஏற்கெனவே செய்து வைத்திருந்த அந்த முழுக் கதையையும் விபீஷணன் வாக்காகவே பொருத்தி அமைத்துத் தன்னுடைய யுத்தகாண்டத்திற்கு ஓர் அவசியமான பகுதிபோல் தோற்றம் அளிக்குமாறு செய்திருக்கிறான் கவிஞன்.

இந்த இறுதிக் காண்டம் காவியப் பூங்கோயிலுக்குக் கோபுரமாக அமைய, இக் கோபுரத்தில் ஒட்டிவைக்கப் பெற்றுக் கம்பீரமாய்ப் பறந்து வானவெளியை அணி செய்வது போன்ற மாட்சியுடன் காட்சியளிக்கும். ஒரு வெற்றிக் கொடி போலக் காண்கிறது இந்தப் பிரகலாத சரித்திரம்.



சித்திர ராமாயணம்

விபீஷண சரணாகதி

பி. ஸ்ரீ.

25. பிரகலாதனே விபீஷணன்!

மந்திராலோசனை மன்றத்திலே ராவணனுக்கு நல்ல புத்தி சொல்லிப் பார்த்தான். இரணியன் கதை வாயிலாகவும் புத்தி புகட்ட முயன்றான்.

அரக்கனல்ல, அந்தணன்!

மேலுளோர் கீழுளோர் யாவரும் விரும்புமாறு குற்றம் ஒழித்துக் குணம் பெருக்கி அறப் பெருஞ் செல்வனாக, அருளாளனாக வாழ்க்கை நடத்தியவன் விபீஷணன். நீதியுள்ளம் படைத்தவன்: பரதனைப் போல் நீதியின் ஒரு நிலயம்.

வந்தனை வழிபாடுகளில் நம்பிக்கையுள்ளவன்; சிந்தனை செய்யும் ஆற்றலும் உள்ளவன்.

திருவள்ளுவர் அந்தணருக்குச் சொல்லும் இலக்கணம் முழுதும் விபீஷணன்பால் அமையப்பெற்றதென்றே கருதியது போல் அனுமன், விபீஷணனது இல்லத்தை அந்தணர் இல்லம் போலப் பொலிகின்றது என உணர்ந்தான். உறங்கிக் கொண்டிருந்த இந்த அந்தணனை உற்று நோக்கியதும் இவனுணர்வைத் தன் உணர்வினால் அப்படியே உணர்ந்து மகிழ்ந்தான் அந்தப் பிரமசாரி.

‘இனம் இனத்தோடே’ என்றவாறு, அனுமனுள்ளம் அப்போதே விபீஷணனுள்ளத்துடன் அதிசயமாய்ச் சங்கமித்தது. பின்னர், விபீஷணனுள்ளம் ‘அரசர் உருக் கொண்டமைந்த வேதிய’னை ராமனுள்ளத்துடன் சங்கமித்தது.

இந்திரஜித்தன் அனுமனைக் கட்டிக் கொண்டு வந்து ராவணன் முன் நிறுத்தியபோது, கொலையாளிகளை நோக்கி அரக்கர்கோன், ‘கொல்லுங்கள்’ என்று கட்டளையிட்டான். அப்போது ‘நில்லுங்கள்’ என்று சொல்லி விபீஷணன் தடுத்து அண்ணனுக்குப் புத்தி சொல்லத் தொடங்கினான்.

அட்சகுமாரனை அனுமன் கொன்றிருந்தும் ‘தூதனைக் கொல்ல வேண்டாம்’ என்று எச்சரிக்கை செய்ததற்கும் அரக்கன் தம்பியின் அந்தண்மை காரணம் எனலாம்.

சீதையை ராவணன் சிறை வைத்தது விபீஷணனது அந்தண்மை நிறைந்த நீதியுணர்வை எப்படிப் புண்ணாக்கி யிருக்க

வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். எனினும், எப்படியாவது அண்ணனைத் திருத்தி நல்வழிப் படுத்துவோம் என்ற எண்ணத்தினால்தான் உடனே ஒத்துழையாமை செய்து விலகிப் போகாமல் ராவணனுடன் இருந்திருக்க வேண்டும்.

மந்திராலோசனையில், சீதையைக் கவர்ந்தது வீரதர்மத்திற்கு இழுக்கு என்றும், குலத்தின் மானத்திற்குக் குறைவு என்றும் கும்பகர்ணன் கூறியது, விபீஷணனுள்ளத்திலே 'ராவணனைத் திருத்தக் கூடும்' என்ற நம்பிக்கை அதிகரிக்கவும் செய்திருக்கக் கூடும்.

பிறகு இந்திரஜித்தின் போர் வெறியைக் கண்டித்து ராவணனை நோக்கி அறவுரையும் அறிவுரையும் வழங்கினான் விபீஷணன். வெகு விநயமாகவும், அதி உசிதமாகவும் தருமத்தின் மாட்சியை, அந்தண்மையின் அருமையை உணர்த்த முயன்றான்.

'நீ உன் குற்றத்தைத் தைரியமாக ஒப்புக்கொண்டு சீதையை விட்டுவிடுவதே உனக்கு வெற்றி!' என்று ராவணனை நோக்கிச் சொன்னான், அந்தண்மை என்னும், 'எவரெஸ்டு' சிகரத்தைக் கண்டு பிடித்த தம்பி. ஆனால் ஆணவப் பெருஞ் சிகரத்தையே தொத்திப் பிடித்துக் கொண்டிருந்த அரக்கனுக்கு, விபீஷணன் ஊதிய சங்கு எப்படிக் கேட்கும்!

'சத்தியாக்கிரக' விபீஷணன்

வெற்றி என்றால் பகைவனைக் கொன்றொழிப்பதுதான்; வலிமையே உரிமை எனக் கண்டு அதிக்க வெறி கொண்டிருப்பது தான். இது ராவணன் கொள்கை. இதில் பின்வாங்குவதற்கோ, தோல்வியை ஒப்புக் கொள்வதற்கோ இடமில்லை.

விபீஷணனோ இந்த வெற்றியை வெற்றியாக ஒப்புக்கொள்ள மாட்டான். 'இமாலயப் பெருந் தவறு இழைத்து விட்டேன்!' என்று தம் தோல்வியை ஒப்புக் கொண்ட காந்தியடிகளின் கொள்கை தானே விபீஷணனுக்கும்? ராவணனோ இமாலயத் தவறு என்ற சிகரத்திலே கொடி நாட்டிக் கொக்கரிக்கிறான்.



அண்ணல் காந்திக்கு அந்தத் 'தோல்வி'யே வெற்றியாக விளைந்தது. அத்தகைய அறிநெறியைத் தான் — ஸத்யாக்ரக தர்மத்தைத்தான் — ராவணேச்வரனுக்கும் சிபார்சு செய்து பார்த்தான் விபீஷணன்.

இக் கொள்கையை விபீஷணன் எங்கே எப்படிக் கற்றுக் கொண்டான்! காந்தி அடிகள் பிரகலாதனை லட்சிய ஸத்யாக்ரகியாகக் குறிப்பிட்டிருக்கிறார் அல்லவா! 'அறிவுச் சுதந்திரத்திற்கு முதலாவது உயிர்த் தியாகி' என்று ஸாக்ரடீஸ் மகானைக் குறிப்பிடுவதுண்டு. முதலாவது ஸத்யாக்ரகி என்ற ஸ்தானத்தைப் பிரகலாதனுக்கு வழங்கினார் காந்தியடிகள்.

விபீஷணனுள்ளமும் தான் சென்று கொண்டிருந்த அந்தணப் பெரு நெறிக்குப் பிரகலாதனை வழி காட்டியாகக் கொண்டது. 'பிரகலாதனது அடிச் சுவடுகளைப் பின்பற்ற முயல்வேன்; அவன் தான் எனக்கு லட்சியம்' என்று விபீஷணன் அடிக்கடி சிந்தித்திருக்க வேண்டும்.

ஆனால் 'நான் எங்கே? பிரகலாதன் எங்கே?' என்ற எண்ணமும் விபீஷணனுள்ளத்தில் தோன்றி யிருக்க வேண்டும். பிரகலாதன் கதை விபீஷணன் உள்ளத்தில் ஊறி உதிரத்தில் கலந்திருந்தது; என்றாலும் ஏதோ ஒரு கனவு லோகத்தில் காண்பது போலத்தான் பிரகலாதனைக் கண்டு வந்தான். தியானம் தரிசனமாக வேண்டுமே! கனவு நனவாக வேண்டுமே!

இந்த நிலையி லிருந்த விபீஷணனை நோக்கி, முகஸ்துதி செய்யத் தெரியாத ஒருவன், 'நீ பிரகலாதனுக்கு நிகராகவே இருக்கிறாய்!' என்று உறுதி கூறினால், எப்படி யிருக்கும், விபீஷணனது ஸத்யாக்ரக உள்ளத்திற்கு? ராவணனே விபீஷணனுக்கு இத்தகைய ஸத்யாக்ரகப் பெரும் பதவியை அளிக்கிறானும். இந்தக் கம்ப விசித்திரத்தைக் கூர்ந்து நோக்குவோம்.



கதையின் படிப்பினை

தருமத்தைப் பற்றியும் சத்தியத்தைப் பற்றியும் தெய்வத்தைப் பற்றியும் விபீஷணன் அருள் மாரியாகப் பொழிந்தவற்றை யெல்லாம் ராவணன் எப்படி அனுபவித்தான்! 'எல்லாம் விபீஷணனது கோழைத்தனம் தான்!' என்று கூறி ஓர் இடிச் சிரிப்புச் சிரித்து விட்டான்.

சிரித்த பின், 'இரணியன் கதையைச் சொல்லிப் பார்ப்போம் கடைசியாக' என்று கதை சொல்லத் தொடங்கினான் விபீஷணன். இந்தக் கதையின் படிப்பினை இராவணனுள்ளத்தில் பதியவேண்டும் என்பது விபீஷணனது எண்ணம்.

'மெய்ம் மறந்து கதை சொன்னான் விபீஷணன், மெய்ம்மறந்து கதை கேட்டான் ராவணன்'

என்று வாசகர்கள் எண்ணுமாறு அமைந்து விட்டது, 'இரணியன் வதைப் படலம்.' படிப்பினை ஆழ்ந்து பதிவதற்கு உரிய வசதிதானே !

இரணிய வீர பராக்கிரமங்களைத் தம்பி வருணிக்க வருணிக்க, ராவணனுக்குத் தன் கனவுகளையும் நினைவுகளையும் லட்சியங்களையுமே ஸ்தூல உருவமாக்கிக் கொண்டுவந்து கண்முன் நிறுத்துவது போலத் தோன்றி யிருக்க வேண்டும். அந்த வீர கம்பீர வாழ்க்கையினிடையே ஓர் அபஸ்வரமாகத் தான் பிரகலாதன் குறுக்கிட்டிருக்க வேண்டும் !

இரணிய நாடகத்திலே ராவணன்தான் இரணிய வேஷத்தில் நடிக்கிறான் ; ஆசையோடு, பேராசையோடு நடிக்கிறான். 'துன்மதி !' என்று தான் விபீஷணனை ஏசுவது போலத் தான் இரணியனும் ஏசுகிறான் மகனை, விபீஷணனே நடத்தும் இந்த நாடகத்திலும் !

'அவனுக்கொரு பேதைப் பிள்ளை, அந்தோ !—எனக்கு ஒரு பேதைத் தம்பி வாய்த்திருப்பது போல' என்று ஒரு கணம் எண்ணியிருக்க வேண்டும். மறு கணம் 'பேதைப் பிள்ளையோ, சூதுப் பிள்ளையோ ! — இரணியன் இவனை ஒழித்துத்தானாக வேண்டும் !' என்று துடித்திருக்க வேண்டும் இராவண இருதயம்.

அந்தப் பிள்ளையை இரணியனால் ஒழித்துவிட முடியவில்லையென்று தெரிந்ததும் இரணிய கோபத்துடன் சங்கமித்து மூண்டெழுகிறது ராவண கோபமும் எனக் கருதலாம். இரணியனது கோபச் சிரிப்பும் விபீஷணனை நோக்கி ராவணன் சிரித்ததை நினைவூட்டுகிறது. சிங்கத்தின் எதிர்ச் சிரிப்பு ராவண கோபத்தை மேலும் பொங்கச் செய்திருக்க வேண்டும்.

இரணிய வதமாகி விட்டது. பிரகலாத பட்டாபிஷேகமும் ஆகிவிட்டது. ராவணனால் எப்படிப் பொறுக்க முடியும் ? கதையின் படிப்பினை இப்போது தெளிவாகி விட்டது ராவணனுக்கு.

ஏதோ ஒரு கெட்ட கனவிலிருந்து விழித்துக் கொள்வது போல் விழித்துக் கொள்கிறான் ; விழித்து,

மூட்டிய தீயென
முடுகிப் பொங்கினான்.

இந்தத் தீ வெளிச்சத்தில் 'முடி சூடுகிறவன் பிரகலாதனா, விபீஷணன் தானா ?' என்று பார்த்துவிடுவோம் என்பதாக ஆத்திரமும் ஏற்பட்டு விடுகிறது.

பிணம் கிடக்க மணம் புரிவதுபோல் அல்லவா முடிசூடிக் கொள்கிறான், இரணியனது மரணத்திற்குக் காரணமான பிள்ளை யாண்டான் ? அவன்தானே இவன் !— இப்படி நமக்குத் தம்பியாக வந்து முளைத்தவன் !

இரணிய மரணம் என்றால் சாதாரணமா ? என்ன வணங்காமுடித் தனி வாழ்வு !—இப்போது இந்தக் கதி !

இதைக் கண்டும் ஓமத் தீ வளர்த்து முடிசூட்டிக் கொள்ளும் அந்த மகிழ்ச்சி தான் என்ன ! 'இந்தத் தம்பியும் அந்த மைந்தனைப் போல்...' என்றெல்லாம் திக் கங்குகள் பறக்கின்றன கண்களிலிருந்தும், சொற்களிலிருந்தும்.

'நானும் இரணியனைப் போலத் தோற்றுப் போனால், இந்த விபீஷணன் கருத்து அந்த இரணிய புத்திரன் கருத்தைப் போல் இருக்கவும் கூடும்' என்கிறது ராவண உள்ளம் :

பாழிசால் இரணியன்
புதல்வன் பண்பெனச்
சூழ்வினை முற்றி,யான்
அவர்க்குத் தோற்றபின்,
ஏழை ! நீ என்பெருஞ்—
செல்வம் எய்திப்பின்
வாழவோ கருத்து ? அது
வரவற் றாகுமோ ?


[பாழிசால் - வலிமை நிறைந்த. பண்பென - பண்பு போல ; தன்மை போல. சூழ் வினை - உன்னுடைய சூழ்ச்சியாகிய செயல். முற்றி - முடிந்து. அது வரவற்றாகுமோ-அந்த உன் எண்ணம் நிறைவேறும் வல்லமை உடையதாகுமோ?]

என்றாலும் விபீஷணன் ஆசைக்குக் குறைவில்லையே :

எண்ணினை செய்வினை ;
என்னை வெல்லுமா(று)
உன்னினை ; அரசின்மேல்
ஆசை ஊன்றினை !

'தூதனைக் கொல்வது வெற்றியன்று' என்று அப்போது விபீஷணன் விலக்கியதற்கும் இப்போது பொருள் தெளிவாகி விடுகிறது.

இந்த மன நிலையிலே, பொறாமைக் காய்ச்சலில், கோபாவேசத்தில் தான் சொல்லுகிறான், 'விபீஷணா, பார் உன் முகத்தைக் கண்ணாடியில் ; தெரிவது பிரகலாதன் !' என்று.



26. மாறிப் பிறந்த அதிசயம்!

ஓமத் தீயைப் பிரமன் வளர்க்க, உடையான் முடிசூட்டிய வைபவத்தை வருணித்து முடித்தான் விபீஷணன். ராவணனுக்கோ ஒரே வயிற்றெரிச்சல். இரணியனுடலை எரிக்கும் தீ வெளிச்சத்திலே, அந்த மணி முடியை அப்படியே கவர்ந்து சிறு பிள்ளை சூட்டிக் கொண்டது போலத் தோன்றியது.

கூர்ந்து பார்த்தான் ராவணன், எரியும் முகத்தை. தான் கண்ணாடி பார்க்கும் போது காணும் பிரதிபிம்பம் போலத் தோன்றியது. முடி சூடிக் கொண்டவனே, விபீஷணன் போட்டுக் கொண்ட வேஷம் தான்!

பாம்பு யார்?

சவத்தை எரித்த தீயும் முடிசூட்டுச் சடங்கின் ஓமத் தீயும் தன் கோபத் தீயும் முத்தீயாக ஜ்வலிக்க, ராவணன் விபீஷணன் முகத்தை நோக்குகிறான். ஒரு பெருஞ் சதிகாரனைக் கண்டு கொள்கிறான். வெகு காலமாகப் பகைவனுக்கு நெஞ்சும், தன் அரண்மனைக்கு வயிறு மாகி உளவு பார்த்துவரும் ஒற்றனைக் கண்டுபிடித்து விடுகிறான்.

விபீஷணன் பயங்கொள்ளி யென்பது ஏற்கெனவே தெரிந்தது தான். இப்போதோ வஞ்சகன் என்பதும் தெள்ளத் தெளியத் தெரிந்து விடுகிறதாம்.

'பஞ்சு' என்றும் 'பதர்' என்றும் துச்சமாக நினைத்திருந்தவன், 'ஐயோ பாம்பு!' என்று காலை இழுத்துக் கொள்கிறான்:

வஞ்சனை மனத்தினை;
பிறப்பு மாற்றினை!
நஞ்சினை உடன்கொடு
வாழ்தல் நன்றரோ!

[மனத்தினை – மனத்தை உடையாய். பிறப்பு மாற்றினை – அரக்கப் பிறவியையே மாற்றிக் கொண்டாய். நஞ்சினை – நஞ்சாகிய உன்னை; (இங்கே) விஷப் பாம்பாகிய உன்னை. நன்று அரோ நல்லது; பேஷ்.]

'பிறப்பு மாற்றினை' என்று ராவணன் சொல்வது கவனிக்கத் தக்கது. பிறவியை மரணத்திற்குப் பின்பே மாற்றிக்கொள்ள முடியும் என்பது பொது ஜனங்களின் நம்பிக்கை. இப் பிறவியிலேயே பிறவி மாற்றிக் கொள்ள முடியும் என்பது தொண்டர்களின் குறிக்கோள்.


இந்த நிலையை அடைய முயன்று கொண்டிருந்த விபீஷணனை நோக்கி, 'நீ பிறவியை மாற்றி விட்டாய்!' என்றும், 'நீ பிரகலாதனாகி விட்டாய்!' என்றும் ராவணனே சொல்லி விடுகிறான். இதைக் கேட்டதும் விபீஷணன் மன நிலைதான் எப்படி இருந்திருக்கும்!

'லட்சியத்தை நோக்கி- யாத்திரை செய்து கொண்டிருந்தோமே, எவ்வளவு காலமாக, எவ்வளவு ஜாக்கிரதையாக! நாம் லட்சியத்தை அடைந்து விட்டதாக அல்லவா ராவணனே அறிவிக்கிறான்!' என்று ஒரு புறம் உவகை. ஒரு புறம் துயரம் அண்ணனைக் குறித்து.

ராவண நஞ்சை உடன் கொண்டு வாழ்வதெப்படி!—நச்சுத் தன்மையைப் போக்கவே முடியாதா? இது நீண்ட நாளாக விபீஷணன் பிரசினை; உள்ளத்திலே போராட்டம். இப்போது ராவணன் பிரசினையும், 'விபீஷணனாகிய நஞ்சை உடன் கொண்டு வாழ்வது நல்லதா!' என்பது தானே!

ராவணன்பாலுள்ள நஞ்சாகிய தீமையைத் துறக்க வேண்டும்; முடியவில்லையென்றால் ராவணனையே துறக்க வேண்டியதுதான். இது விபீஷணன் கொள்கை.

இக் கொள்கை நிறைவேறுவதை ராவணனே இப்போது துரிதப்படுத்தும் நிலையில் இருக்கிறான். இது விதியின் விசித்திரம்.



ராவணனே விபீஷணனைத் துரத்த வேண்டுமென்று துடிக்கிறான் இப்போது. 'கொன்று களைந்து விடுவோமா!' என்று

கூடக் கோபங் கோபமாய் வருகிறது அண்ணனுக்கு.

குணசித்திர விளக்கம்

'இந்தப் பயலைக் கொல்லாமல் விடுவதே பெரிய காரியம், நாம் இப்போது செய்யக்கூடிய பெருந் தியாகம்!' என்று கருதுகிறது ராவணனுள்ளம்.

மேலும் கோபம் மூட்டினால் இந்தத் 'தியாக புத்தி'யும் போய் விடுமாம்:

'பழியினை உணர்ந்துயான்
படுக்கிலேன் உனை;

ஒழிகிலை புகலுதல்;
ஒல்லை நீங்குதி;

விழிஎதிர் நிற்றியேல்
விளிதி!' என்றனன்,

அழிவினை எய்துவான்
அறிவு நீங்கினான்.



காந்தி யடிகளைப் போல் ஒரு மகாத்மாவையல்லவா சிருஷ்டித்துக் காட்டுகிறான் கம்பன், விபீஷணன் என்ற காவிய பாத்திரத்திலே! ராவணனுக்குத் தெரிவதோ 'ராஜ பக்தி இல்லாத பாவி இவன்; தமையனுக்கும் துரோகி; அரக்கர் குலத்திற்கே ஒரு களங்கம்!' என்பது.

விபீஷணனுடைய தர்மோபதேசம் ராவணனுக்குத் தலைவலியாகி விட்டது.

விழிஎதிர்
நிற்றியேல்
விளிதி!

—விழி எதிரே நிற்பாயானால் உன்னை இப்போதே தொலைத்துத் தலைமுழுகி விடுவேன்—என்ற வார்த்தையும் புறப்பட்டு விட்டது.

[பழி—தம்பியைக் கொன்ற பழி. படுக்கிலேன் உனை—உன்னைக் கொல்லாது விட்டேன். ஒழிகிலை புகலுதல்—சொல்லுதலை ஒழிகின்றாயில்லை; வாய்க்கு வந்தபடி பேசுவதை விட்டு விடவில்லை. ஒல்லை நீங்குதி—விரைவில் என்னை விட்டுப்போ. நிற்றியேல்—நிற்பாயானால். விளிதி—செத்துப் போவாய்; என் கையாலேயே இறந்து போவாய். எய்துவான்—அடையும் பொருட்டு.]

விபீஷணன் இடித்து அறிவு கூறியதைப் பொறுக்க முடியவில்லை ராவணனால். எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரகலாத சரித்திரம் ராவணனுள்ளத்தைக் கலக்கி விட்டது.

விபீஷண குணசித்திரத்தில் ஏற்கெனவே புலப்படாமலிருந்த பகுதியும் புலனாகி விட்டது, பிரகலாதன் கதை வாயிலாக. ராவணனுக்கும் தான்; வாசகராகிய நமக்கும் தான்.

என் செய்வான் விபீஷணன்! உடனே கிளம்பி வானத்தில் நிற்கிறான். இன்னும் துறந்து அப்படியே போய்விடாமல், பற்பல உறுதி மொழிகளைக் கூறுகிறான்:

என்றலும், இளவலும்
எழுந்து வானிடைச்
சென்றனன், துணைவரும்
தானும் சிந்தியா
நின்றனன், பின்னரும்
நீதி சான்றன
ஒன்றல பலப்பல
உறுதி ஓதினான்.

[இளவலும்—இளைய சகோதரனாகிய விபீஷணனும். வானிடை—வானத்திடத்து. சிந்தியா—சிந்தித்து. நின்றனன்—நின்றவனாய். பின்னரும்—பின்னும். நீதி சான்றன—நீதி மிகுந்தவனாய். ஒன்றல—ஒன்று அல்லாத.]

'வாழ வேண்டுமென்று விரும்புகிறாய்.



ஆனால் அறம் தவறியவர்களுக்கு வாழ்வும் உண்டோ?' என்கிறான்:

வாழ்மைதான் அறம்பிழைத்
தவர்க்கு வாய்க்குமோ?

[வாழ்மை – வாழ்க்கை.]

அறம் பிழைத்தவர்கள், தாமும் உயிர் பிழைப்பதில்லை; தாங்கள் சாவதற்குமுன் தங்களைச் சார்ந்தவர்களின் கஷ்ட நஷ்டங்களையும் பார்த்து விடுகிறார்களாம்.

ஆல மரம் கிளைகளோடும் விழுதுகளோடும் விழுவது போல விழுவார்களாம்:

புத்திரர், குருக்கள், நின்
பொருவில் கேண்மையர்
மித்திரர், அடைந்துளோர்,
மெலியர், வன்மையோர்
இத்துணை பேரையும்
இராமன் வெஞ்சரம்
சித்திர வதைசெயக்
கண்டு தீர்தியோ?

[நின் பொருவில் கேண்மையர் – உன் னுடைய ஒப்பற்ற உறவினர்கள். அடைந்துளோர் – உன்னை அடைக்கலமாக அடைந்தவர்கள். மெலியர் – பலவீனர். வன்மையோர் – வலிமை பெற்றவர்கள். இத்துணை–இத்தனை. வெஞ்சரம்–கொடிய அம்பு. தீர்தியோ – உயிர் நீங்கப் போகிறாயோ?]

இப்படி யெல்லாம் விபீஷணன் அறமழை பொழிந்தான். ஆனால் ராவணனை அசைந்து கொடுக்கிறவன்! விழி எதிர் நின்று பேசியதெல்லாம் பயனற்றுப் போனது போலத்தான் இந்த வானப் பொழிவும் கொஞ்சமும் பயன்படவில்லை!

ஊர் துறந்து உறவு துறந்தது

கடைசியாக விபீஷணன் இலங்கையை விட்டுப் புறப்படுகிறான்:

'எத்துணை வகையினும்
உறுதி எய்தின
ஒத்தன உணர்த்தினேன்;
உணர கிற்றிலை;
அத்த!என் பிழைபொறுத்
தருளு வாய்'என
உத்தமன் அந்நகர்
ஒழியப் போயினான்.

[எத்தனை வகையினும்—எல்லா வகையினாலும். உறுதி எய்தின — உறுதி பொருந்தியனவும். ஒத்தன—நீதி தர்மத்திற்கு ஒத்தனவும் ஆனவற்றை. உணர்த்தினேன் — அறிவுறுத்தினேன். அத்த—தலைவனே.]

'நான் அறிந்து உனக்குப் பிழை செய்யவில்லை. அறியாமையால் ஏதேனும் பிழை செய்திருந்தால் அதைப் பொறுத்தருள்வாய்' என்று அபராத க்ஷாமணம் செய்து கொண்டு புறப்படுகிறான் விபீஷணன்.

விபீஷணன் மட்டும் புறப்பட்டுப் போகவில்லை. நால்வருடன் போகிறான். துணைவரும் தானுமாக விபீஷணன், கடற்கரையில் வானர சேனையுடன் ராமன் தங்கி யிருக்கும் இடத்திற்குப் போகிறான். கடலைத் தாண்டிப் போய்ப் பெருஞ் சேனையைப் பார்க்கிறார்கள் ஐவரும்.


விபீஷணன் தன்னுடன் வந்த அமைச்சர் நால்வரையும் நோக்கி,

'அறம்தலை நின்றவற்(கு)
அன்பு பூண்டனன்;
மறந்தும் நன்புகழலால்
வாழ்வு வேண்டலன்;
"பிறந்தஎன் உறுதிநீ
பிடிக்க லாய்"எனத்
துறந்தனன்; இனிச்செயல்
சொல்லு வீர்'என்றான்.

[தலைநின்றவற்கு — முக்கியமாகக் கொண்டு நின்றவனாகிய ராமனிடம். நன் புகழ் — சிறந்த புகழ். வாழ்வு —(இங்கே)ராஜ வாழ்வு; ராவணனோடு இசைந்து வாழும் போக வாழ்வு. வேண்டலன் – விரும்பவில்லை. பிறந்த – உடன் பிறந்த. என் உறுதி – என் உறுதியான கருத்தை. நீ பிடிக்கலாய் – தம்பியாகிய நீ கைக்கொள்ளாமலிருக்கிறாய். என – என்று சொல்லி ராவணன் என்னைத் துறக்க. துறந்தனன் – நானும் அவனைத் துறந்து விட்டேன்.]

ராவணன் துறந்த பின்பே இவன் துறந்ததும் இந்தச் சத்தியாக்கிரக உள்ளத்தின் தனிப் பெருஞ் சிறப்பினையே வெளியிடுகிறது. 'இனிமேல் உனக்கு உறவு ராவணன் இல்லை; தரும மூர்த்தியாகிய ராமன் தான்!' என்று அமைச்சரும் கூறுகிறார்கள்.

இப்படி விபீஷணன் தன் பிறவியை மாற்றிக் கொண்டதற்குப் பிரகலாத சரித்திரம் பெரிதும் உதவி யிருக்க வேண்டுமல்லவா?



27. ஸ்ரீமான் விபீஷணன்!

ஆதிகவியாகிய வால்மீகி மாமுனிவரைப் பல வாரங்களாக மறந்து விட்டோம். பிரகலாதன் கதையை அவர் சொல்லாதது தான் காரணம். இனி விபீஷணனை ஆதிகாவியத்திலே சந்திப்போம்.

இந்திரஜித்தைக் கண்டித்து, விபீஷணன் ராவணனை நோக்கிச் சீதையை விட்டுவிடச் சொன்னதும், ராவணன் கடுமையாக விபீஷணனைப் பழிக்கவே, நால்வரோடு விபீஷணன் அங்கிருந்து எழுந்தான் என்பதாக வால்மீகியின் யுத்த காண்டத்திலே பதினாறாம் சர்க்கம் தெரிவிக்கிறது.

ஸ்ரீமான்

'பகைவரோடும், கோபித்துச் சீறிக்கொண்டிருக்கும் பாம்போடும் வசித்தாலும் வசிக்கலாம்; நண்பன் போலத் தோன்றிப் பகைவனிடம் பட்சபாதம் கொண்டிருப்பவனுடன் வசிக்கவே கூடாது' என்றான் ராவணன். விபீஷணனைப் பிடிக்கும் நோய் பங்காளிக் காய்ச்சல் என்பதாகவும் வைத்திய சோதனை செய்து கண்டுபிடித்து விட்டவனைப் போலப் பேசினான்.

'சாதுவே!' என்று பரிகாசமாக விளித்து, 'நான் எல்லாராலும் வணங்கப் பெற்றுப் பாக்கியசாலியாக இருப்பதை நீ விரும்பவில்லை' என்றான். துதிக்கையால் யானை தன் தலைமேல் மண்ணைப் போட்டுக் கொள்வதையும் நினைவூட்டினான்.

'அடா அரக்கா! நீ சொன்னதை வேறொருவன் சொல்லியிருந்தால் அக்கணத்திலேயே நாசமாகியிருப்பான்!' என்றும் சொன்னான். 'அரக்கர் குலத்தைக் கெடுப்பவன்' என்றும் விபீஷணனை வருணித்தான்.

அது கேட்டதும் விபீஷணன் தன் கதாயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தன்னைச் சார்ந்த நான்கு அரக்கர்களுடன் ஆகாயத்தில் கிளம்பியதாக வால்மீகி ராமாயணம் தெரிவிக்கிறது. இந்த நான்கு துணைவரைக் கம்பனும் மறந்து விடவில்லை.

கதாயுதத்தைக் கையில் எடுத்துக் கொண்டு போனதாகக் கம்பன் சொல்லவில்லை.

முரண்தடந் தண்டும்
ஏந்தி

[முரண் தடந்தண்டு – வலிமையுள்ள பெரிய கதாயுதம்.]

என்று இந்திரஜித்து விபீஷணன் முன்னிலையில் பின்பு கூறப்போவதிலிருந்து, 'விபீஷணன் எப்போதும் கதையும் கையுமாயிருப்பவன்; கதாயுதத்துடனே தான் போயிருக்க வேண்டும்' என்று ஊகித்துக் கொள்ள வேண்டியது தான்.

எனினும், துணைவருடனும் கதாயுதத்துடனும் விபீஷணன் கிளம்பி விட்டதாய்க் கம்பன் வெளிப்படையாகச் சொல்லாமல், துணைவருடனும் வருத்தத்துடனும் கிளம்பிப் போனதாகச் சொல்லுகிறான். இது கவனிக்கத் தக்கது.

விபீஷண குண சித்திரத்தைப் புரட்சிகரமாக வளர்த்துக் காட்ட வேண்டும் என்பது கம்பனது சங்கற்பம் எனக் கருதுவது தவறாகாது.

கதாயுதம் தவிர வேறு உடைமைகளையெல்லாம் கைவிட்டுக் கிளம்பிய விபீஷணனை 'ஸ்ரீமான்' என்று வால்மீகி குறிப்பிடுகிறார். இதன் பொருளாழம் நுண்ணறிவாளர்களின் பண்பட்ட உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. இந்த 'ஸ்ரீமானி'லிருந்து கம்பன் தன் விபீஷணனை அதிசயமாகத் தோற்றுவிக்கிறான் என ஊகிக்கலாம்.

வாழ்க்கையும் லட்சியமும்

அந்த ஸ்ரீமானும் பிறகு கோபங் கொண்டு மேலும் உறுதிமொழிகள் கூறுவதாக வால்மீகியில் வருவது ஓர் அருமையான இயற்கைச் சித்திரம்.

கம்பனுடைய விபீஷணனும் ராவணனுக்கு இடித்துக் கூறுகிறான் உறுதி மொழிகளை. என்றாலும் கோபம் துளியும் இல்லாமல் பேசுகிறான். கம்பனது லட்சிய சித்திரத்திலே விபீஷண கோபத்திற்கு இனி இடமில்லை.

கோபத்திலும் கொஞ்சமும் மரியாதை தவறிப் பேசவில்லை விபீஷணன் என்று தான் வால்மீகியும் காட்டுகிறார். 'அநியாயமாக ராவணன் அழிந்து போகிறானே, தீப்பற்றி எரியும் வீட்டில் இருப்பவனைப் போல!' என்ற நெஞ்சக் கொதிப்பே தான் விபீஷண கோபத்திற்குக் காரணம்.

'உங்கள் நன்மையை நாடி நான் இது வரையில் சொன்னவை, விரோதமாகத் தோன்றினாலும், நீங்கள் பெரியவராதலால் பொறுத்துக் கொள்ளவேண்டும்' என்று வால்மீகத்தில் வரும் அபராத க்ஷாமணம் தான் கம்பனில்,

> அந்த! என் பிழை பொறுத்
> தருளுவாய்!

[அந்த – தலைவனே.]

என்று சுருக்கமாக அமைந்திருக்கிறது.

'எப்படியாவது உங்களுக்கு க்ஷேமமுண்டாகக் கடவது! நான் போகிறேன், என்னை விட்டு எப்படியாவது சுகம்அடையுங்கள்' என்று வால்மீக விபீஷணன் கூறுவதும் உருக்கமாயிருக்கிறது.

இந்த உருக்கம் உச்ச நிலைக்கு வந்து விடுகிறது. 'ஆயுள் முடியுங்காலம் நெருங்கப் பெற்றவர்கள் தமது நண்பர்கள் சொல்லும் இதமான வார்த்தைகளை ஒரு போதும் கேட்க மாட்டார்களல்லவா?' என்று விபீஷணன் கூறி முடிக்கிறான்.

விபீஷண சரணாகதிக்க உரிய அடிப் படையைத்தான் வால்மீகியும் பதினரும் சர்க்கத்தில் அமைத்திருக்கிறார். ஆனால் பிரகலாதன் கதையைக் கருவியாகக் கொண்டு கம்பன் அமைத்திருக்கும் லட்சிய அடிப்படை புரட்சிகரமானது.

இருவர் கதைப் போக்கு

விபீஷணன் ஒரு முகூர்த்த காலத்துக்குள் ராமலட்சுமணர் இருந்த இடம் வந்து சேர்ந்ததாக வால்மீகி கூறுகிறார். மின்னற் கொடிபோல் வானத்தில் வந்து நின்ற விபீஷணனைப் பூமியில் நின்ற வானரத் தலைவர்கள் கண்டனர் என்று மின்னல் வேகத்திலே செல்லுகிறது வால்மீகியின் கதை.

கம்பனோ,

> உத்தமன் அந்தகர்
> ஒழியப் போயினான்


என்று சொல்லிப் பின், விபீஷணுடியர் வானரர்கள் இருந்த இடத்திற்குப் போனதைச் சற்று நீட்டிக் கூறியுள்ளான்.

கடற் கரையில் வானர சேனையுடன் ராமன் வந்து தங்கியிருக்கிறான் என்பது தெரியுமாதலின், இவர்கள் அங்கே போய் அச் சேனையைக் கண்ணுற்றதாகச் சொல்லுகிறான் கம்பன். அச் சேனையின் மிகுதி குறித்து விபீஷணன் அதிசயமாகத் துணைவரை நோக்கி உரையாடுகிறான்.

பிறகு விபீஷணன் செய்யத் தக்கதைக் குறித்து வினவியதாகவும், ராமனை உடனே காணுமாறு அவர்கள் கூறியதாகவும் கம்ப ராமாயணம் தெரிவிக்கிறது. அமைச்சர் கூறியதை உடன்பட்டு விபீஷணன் மகிழ்ச்சி தெரிவிக்கிறான்.

இரவில் ராமனை அடைவது சரியன்று எனக்கருதி அவர்கள் சோலையில் தங்குகிறார்கள். சூரியோதயம் ஆகிறது.

உதயமானதும் ராமன் கடற்கரைப் பக்கத்திலே சீதா பிராட்டியை நினைத்து மனந் தளர்ந்து பெருமூச்சு விடுகிறான். மணற்பரப்புக்கள், உப்பங்கழிகள் முதலியவற்றை நோக்குகிறான்.



சுக்கிரீவன் முதலியோர் தேற்ற ஒருவாறு ஆறுதல் அடைந்து அந்த இடத்தை விட்டுப் போய்த் தன் இருப்பிடத்தை அடைகிறான். இதே சமயம் விபீஷணன் வானர சேனையின் பக்கம் வந்து சேர்கிறான் என்பது கம்பன் கதை.

இந்த விவரங்களெல்லாம் வால்மீகத்தில் இல்லை. கம்பனது இக்கதையமைப்பு முறையில் விசேஷமான கவித்திறனுமில்லை; கற்பனைத் திறனையும் நாம் சிறப்பாகக் காண முடியவில்லை.



ஆதிகாவியத்தில் கதை வளர்ச்சி

வால்மீகியின் யுத்த காண்டத்திலே பதினேழாம் சர்க்கத்தில், விபீஷணன் வானரரைக் கண்டது சுருக்கமாய்க் கூறப்படுகிறது என்பதை ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கிறோம்.

நான்கு அரக்கர்களுடன் வந்த விபீஷணனை வானர ராஜாவான சுக்கிரீவன் பார்த்ததும் மற்றை வானர வீரர்களுடன் ஆலோசனை நடத்துகிறான். இந்த ஆலோசனை ஒரு முகூர்த்த காலமாக நடக்கிறது.

'பல ஆயுதங்களுடனும் துணைவர் நால்வருடனும் விபீஷணன் நம்மைக்கொல்லவென்றே வருகிறான்' என்கிறான் சுக்கிரீவன். மற்றை வானரர்களோ விபீஷணாதியரைக் கொல்லவே சித்தமாகி விடுகின்றனர்.

வானரர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே, விபீஷணன் வானத்திலிருந்தவண்ணம் பெருங் குரலில் பேசுகிறான். 'கொடிய நடத்தையுள்ள ராவணன் தம்பி' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான்.

ராவணன் சீதாதேவியைச் சிறைப்படுத்தி வைத்திருக்கும் கொடுமையையும் குறிப்பிடுகிறான். தான் அவனுக்குப் புத்தி சொன்னதாகவும், அவன் தன்னை அவமானப்படுத்தி விட்டதாகவும் தெரிவிக்கிறான்.

'ஆகையால் நான் என் பெண்டு பிள்ளைகளை விட்டு, ராமனைச் சரணமாக வந்தடைகிறேன்' என்கிறான்.

சுக்கிரீவனுக்குச் சந்தேகம் தீரவில்லை. வேகமாகப் போய் ராமனிடம் செய்தி சொல்லுகிறான்.

செய்தி மட்டும் அல்ல; தன் அபிப்பிராயத்தையும் சொல்லிவிடுகிறான். விபீஷணாதியரிடம் ஒருபோதும் நம்பிக்கை வைக்கலாகாது என்கிறான்.

உடனே ராமன் மற்றை வானரர்களை யும் ஆலோசனை கேட்கிறான். ஓர் ஆலோசனை மன்றம் போல் அவர்கள் கூடியிருந்து தத்தம் கருத்தை வெளியிடுகிறார்கள்.

முதன் முதல் அங்கதன் தன் கருத்தை வெளியிடுகிறான். சுக்கிரீவன் அபிப்பிராயத்தை ஆதரிக்கிறான் வாலி மகனும். ஆராய்ந்தறியாமல் விபீஷணனை உடனே நம்பிவிடக் கூடாது என்கிறான்.

மற்றையோரும் தங்கள் புத்தியில் தோன்றிய வண்ணம் அபிப்பிராயம் சொல்லுகிறார்கள்.

கடைசியாக அனுமன் பேசுகிறான். விபீஷணனுடைய முகம் தெளிவாயிருக்கிறதென்றும், அவனிடம் தனக்கு ஐயமே இல்லையென்றும் சொல்லுகிறான்.

ராமன் செய்து வருகின்ற முயற்சிகளையும், ராவணன் ஒழுகி வருகின்ற தீத்தொழில் நெறியையும் நன்குணர்ந்தே விபீஷணன் வந்திருப்பதாகத் தெரிவிக்கிறான்.

'வாலி வதைக்கப்பட்டதையும், சுக்கிரீவன் பட்டத்துக்கு வந்ததையும் கேள்வியுற்று ராஜ்யம் வேண்டுமென்ற எண்ணத்துடன் யுத்தி பூர்வமாக இங்கு வந்திருக்கிறான்' என்பதாகவும் அனுமன் தெளிவாய்க் கூறுகிறான். எனவே இவனைச் சேர்த்துக் கொள்ளலாம் என்கிறான்.

ராஜ்ய ஆசையுடன் வந்திருந்தாலும் விபீஷணனுடைய எண்ணம் நல்ல எண்ணம் தான என்கிறான். இக் கருத்தை ராமனும் ஒப்புக் கொள்கிறான்.

குற்றங்கள் இருப்பினும் சரணாகதனை அங்கீகரிக்க வேண்டியது தான் என்று தீர்மானிக்கிறான் ராமன். சுக்கிரீவனோ, தமையனைக் கைவிட்டு வந்தவனை அங்கீகரிக்கக் கூடாதென்று மீண்டும் கூறுகிறான்,—தன் சொந்தக் கதையும் அது தானே என்பதை மறந்து விட்டது போல.

இந்தச் சுக்கிரீவனது கொள்கையை மறுத்துப் பேசுகிற ராமன், சுக்கிரீவனைப் போன்ற நண்பர் கிடைப்பது அரிது என்றும் சொல்லுகிறான். அத்தகைய நண்பனாக விபீஷணனும் அமையக்கூடும் என்பதைக் குறிப்பாகக் கொள்ளலாம்.

'உலகத்தில் எல்லாத் தம்பிகளும் பரதனுக்கு ஒப்பாவரோ?' என்று ராமன் சொல்லுகிறான். விபீஷணனைச் சந்தேகிக்கும் சுக்கிரீவனை ஆத்மசோதனை செய்யத் தூண்டுவது போல வந்து விழுகிறது ராமன் வார்த்தை.


இப்படி ராமன் சொல்லியும், மறுபடியும் சுக்கிரீவன் விபீஷணனைச் சந்தேகித்துப் பேசுகிறான். ராவணன் ஏவ, விபீஷணன் வந்திருக்கிறானென்றும் அவனைத் துணைவர்களுடன் கொல்ல வேண்டுமென்றும் வற்புறுத்துகிறான்.

இது கேட்ட ராமன் சரணாகதனைக் காப்பது தன்னுடைய நோன்பு என முடிவாகக் கூறிச் சுக்கிரீவனை நோக்கி, 'நீயே போய் விபீஷணனை அழைத்து வா' என்று சொல்லி விடுகிறான்.

'அவன் (வந்திருப்பவன்) விபீஷணனாக இருக்கட்டும். அன்றி ராவணனேயாக இருக்கட்டும்! நான் அபயம் கொடுத்து விட்டேன்' என்று ராமன் கூறுவதாக வால்மீகத்தில் வருவது ராம குணநிசயத்திற்கு மிகவும் பொருத்தமானது. இதைக் கேட்ட சுக்கிரீவன் மனசில உடனே மாறி விபீஷணனது தூய உள்ளத்தை அறிந்து கொள்ளப் பக்குவமாகிவிடுகிறது என்பதாக வால்மீகி காட்டுவதும் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது.

சரணாகதனான விபீஷணனை ராமன் அங்கீகரித்ததை இவ்வாறு பதினெட்டாம் சர்க்கத்தில் விவரித்து, அடுத்த சர்க்கத்திலே விபீஷணனுக்கு ராமன் லங்கையை அளித்துப் பட்டாபிஷேகம் செய்ததைக் குறிப்பிடுகிறார் வால்மீகி.

இனி நாம் கம்பனைப் பின்பற்றி 'விபீஷண சரணாகதி' யை ஆராய்வோம்.



28. மூவகைக் குறி

'ஓடி ஒழிந்து போ; இனி என் கண் முன் நின்றாய் செத்தாய்!' என்று ராவணனால் துரத்தப்பட்ட விபீஷணன் விண்ணில் நின்று, 'தருமத்தை ஒழிக்க முயல்வோர் சாவது நிச்சயம்; தருமமே வாழ்வு!' என்று சொல்லி இலங்கையை விட்டுப் புறப்பட்டான், அமைச்சர் நால்வருடன்.

கடற்கரையில் வேறொரு கடலைக் கண்டானும். செந்தாமரை பூத்த ஒரு பாற்கடலைத்தான். அங்கங்கே தீபங்கள் ஒளி வீசிய வெள்ளை வானர சேனை சமுத்திரம் அது.

தாழ்ச்சியே மாட்சி

'இப்போது நான் செய்யத் தக்கது யாது?' என்று அமைச்சரைக் கேட்கிறான். இப்படி இந்த நிலையில் கேட்பதிலிருந்தும், இச் சமயம் இவன் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளிலிருந்தும் களங்கமற்ற உள்ளம் பளிங்கு போலக் காண்கிறதல்லவா!

இந்த உள்ளத்தைக் கற்ற வண்ணமா யிருக்கும்; அந்த மந்திரிமார் சொல்லுகிறார்கள்:

'மாட்சியின்
அமைந்தது
வேறு மற்றிலை,
தாழ்ச்சியில்
பொருள் தரும்
தரும மூர்த்தி
யைக்
காட்சியே
இனிக் கடன்'
என்று கல்வி சால்
சூழ்ச்சியின் கிழவரும்
துணிந்து சொல்லினர்.

[மாட்சியின் அமைந்தது-மாட்சியுடன் பொருந்தியது. வேறு மற்று இலை-வேறொன்று இல்லை. தாழ்ச்சியில்-தாழ்ந்து வணங்குகையில்; பணிவு-மனப்பான்மையுடன் சரணாகதி செய்கையில். பொருள் தரும்-விரும்பும் பொருளைத் தருகின்ற. காட்சியே-காண்பதே; தரிசிப்பதே. கல்வி சால்-கல்வி மிகுந்த. சூழ்ச்சியின் கிழவர் - ஆலோசனைக்கு உரியவரான மந்திரிமார்.]

தருமத்தில் பற்றுள்ளவன் தரும மூர்த்தியைப் பற்றிக் கொள்வதில்தானே கண்ணும் கருத்துமா யிருப்பான்? இனிமேல் பின்வாங்குவது சரியில்லை என்பது மந்திரிமார் துணிவுங்கூட. தரும மூர்த்தியைப் பற்றிக் கொள்வதால் அடையும் மாட்சிக்குத் தாழ்ச்சியே வழி என்பது குறிப்பு.

'தாழ்ச்சியில் பொருள் தரும் தருமமூர்த்தி' என்பதில் பக்தி மதத்தின் இரகசியங்களில் ஒன்றைக் கண்டு கொள்ளலாம். எவன் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறானோ அவன் உயர்த்தப் படுவான்—தாழ்ந்தவன் உயர்வான்; உயர்ந்தவன் தாழ்வான் — பகவானுடைய சன்னிதியிலே.

இத்தகைய சரணாகதி நெறியில் வேண்டுகின்ற பொருளைக் கொடுக்கிறும் தருமமூர்த்தியாகிய இறைவன்.

'குலம் தரும்; செல்வம் தந்திடும்......'



1936
லக்ஷ்மணபுரி
காங்கிரஸ் தலைவர்
ஜவாஹர்லால் நேரு



1937
பெப்ஸ்பூர்
ஜவஹர்லால் நேரு

என்றெல்லாம் நாராயண நாமத்தின் மாட்சியைப் பேசுகிறார் திருமங்கை ஆழ்வார். சுருங்கச் சொன்னால், 'பெற்றதாயினும் ஆயின செய்யும்.' உலகத்திற்கெல்லாம் தாயான இதயம் அல்லவா கடவுள்! — தாழ்ச்சி கண்டு இரங்கும் தாயுள்ளம் அல்லவா!

ஆனால் தாழ்ச்சி வேறு; தாழ்ச்சி-மனப்பான்மை (Inferiority Complex) வேறு. 'தாழ்ச்சி' என்ற சரணாகதி வழியில் அபாரமான தன்னம்பிக்கையும் உண்டு.

பிறவியிலேயே வேறுபிறவி

அமைச்சர் சொன்னதை உடன்பட்டு விபீஷணன் பேசுகிறான்:

நல்லது சொல்லினீர்;
நாமும் வேறினி

அல்லது செய்துமேல்
அரக்க ராதுமால்!

எல்லையில் பெருங்
குணத்(து)
இராமன் தாளிணை

புல்லுதும், புல்லி இப்
பிறவி போக்குவேம்!

[சொல்லினீர்—சொன்னீர்கள். அல்லது—அல்லாததாகிய வேறொரு செய்கை. செய்துமேல் — செய்வோமானால். அரக்கர் ஆதுமால் — அரக்கர் ஆகி விடுவோமே. எல்லையில் — எல்லையில்லாத. தாள் இணை — திருவடிகள் இரண்டையும். புல்லுதும் — தழுவிக் கொள்வோம். புல்லி — தழுவி. இப்பிறவி— அரக்கராகவுள்ள இந்தப் பிறவி. போக்குவேம் — போக்குவோம்.]

ராமனைச் சரணாகதி செய்ததும், 'அந்த அரக்கர் குலம் நமக்கு இல்லை' என்றவாறு இந்தப் பிறவியே போய் விடும் என்கிறான் விபீஷணன். 'நாம் திரும்பிப் போவோமானால் நாமும் அரக்கராகி விடுவோமே!' என்று கூறுகின்ற குழந்தையுள்ளத்தைத்தான் பாருங்கள்!

விபீஷணன் மேலும் பேசுகிறான். இந்த ஞானக் குழந்தையுள்ளம் உருகி ஓடுவது போல வருகின்றது பேச்சு:

முன்புறக் கண்டிலன்;
கேள்வி முன்பிலன்;

அன்புறக் காரணம்
அறிய கிற்றிலேன்;

என்புறக் குளிரும், நெஞ்(சு)
உருகு மேல், அவன்

புன்புலப் பிறவியின்
பகைஞன் போலுமால்!

[முன்புற — இதற்கு முன்னாக. கண்டிலன் — நான் கண்டதில்லை. கேள்வி முன்பு இலன் — முன்பு அதிகமாய்க் கேள்விப் பட்டதும் இல்லை. அன்புற — அன்பு பொருந்த. அறியகிற்றிலேன் - அறிய வல்லமையுள்ளவன் அல்லேன். என்பு உறக் குளிரும் — குளிர்ச்சி எலும்பிலே பொருந்தியதென்று சொல்லுமாறு உடல் குளிரும். உருகும் ஏல் - உருகும் ஆயின். புன்புலப் பிறவியின் — அற்பத்தனமான அறிவை





யுடைய பிறவியின். பகைஞன் போலுமாம்–பகைவனாவான் போலத் தோன்றுகிறது.]

ராமனைக் குறித்து விபீஷணனுக்கு விசேஷமாக ஒன்றும் தெரியாதாம். எனினும் உள்ளம் உருகுவதால், தான் வெகு காலமாக நாடுகின்ற தருமத்தின் பூர்ண சொருபமே ராமனாக இருக்க வேண்டும் என்று ஊகிக்கிறான்.

கடவுளைப் 'பிறவியின் பகைவன்' என்று சாதாரணமாய்க் கூறுவதுண்டு. விபீஷணனோ, ராமனுடைய தொடர்பு 'அரக்கன்' என்ற இழி பிறவியைப் போக்கி, 'இந்தப் பிறவியிலேயே நாம் மாறிப் பிறந்து விட்டோம்!' என்பது போன்ற ஓர் உணர்ச்சியைத் தந்து விடும் எனக் கருதுகிறான்.

காலம் வந்தது

தன்னையும் அறியாமல் உள்ளம் பரவசமாகின்ற நிலையில் 'பெருங் குணத்து இராம'னை இவ்வாறு கருதுகின்ற விபீஷணனுக்கு ஒரு பழைய நினைவு பளிச் சென்று எழுகின்றது. ஆம்; ஒரு பழைய பெரு நினைவு.

அந்தக் காலத்திலே ராவணாதி ராட்சஸர்கள் பிரமனைக் குறித்துத் தவங் கிடந்து வரம் பெற்றார்கள். அவர்களெல்லாம் ராட்சஸ பலம், மாய சக்திகள், அஸ்திர சஸ்திரங்கள் முதலியன வேண்டுமென்று, அவற்றை வரமாகப் பெற்றுக் கொண்டார்கள். அந்தச் சூழ் நிலையில் விபீஷணன் கேட்ட வரம் தான் என்ன!

எல்லாரும் ஆணவ உணர்ச்சியுடன், தன்னலக் காதலுடன், சுகபோக விருப்புடன், அதிகார ஆடம்பரப் பற்றுடன் வரபலங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள, விபீஷணனோ 'அன்பு வேண்டும்' என்றுதான் வரங் கேட்டானும்.

கடவுள் மீது அன்பு வேண்டும் என்று வரம் கேட்டான். உயிர்க்குலத்தின் மீதும் அன்பு வேண்டும் என்றான்.

அறம், நீதி, அருள் ஆகியவற்றைக் குறித்தும் வரம் வேண்டினான் ;

ஆதியம் பரமனுக்(கு)
அன்பும் நல்லறம்,

நீதியின் வழாமையும்,
உயிர்க்கு நேயமும்,

வேதியர் அருளும்நான்
விரும்பிப் பெற்றனன்.

[ஆதியும் பரமன் - ஆதியான அழகிய பரமாத்மா. நீதியின் வழாமை — நீதியிலிருந்து தவறாமலிருப்பது. வேதியர்—(இங்கே) முனிவர்கள்.]

அப்படித் தான் முற்காலத்தில் வரம் வேண்டிப் பெற்றுக் கொண்டதை இப்போது அமைச்சர்களுக்கு நினைவூட்டுகிறான். அந்த வரம் பயன் அளிக்கும் காலம் வந்துவிட்டதென்று சொல்லி அமைச்சர்களின் தீர்மானத்தை ஒப்புக் கொள்கிறான்.

'சுழி — ஜோஸ்யங்கள்'

இரவு நேரமாக இருந்ததால் அவர்கள் அப்படியே போய் ராமனைச் சந்திக்க விரும்பவில்லை :

இருளுற
எய்துவ(து)
இயல்பன்
றுமெனப்
பொருளுற
உணர்ந்தஅப்
புலன்கொள்
புந்தியார்,
மருளுறு சோலையில்
மறைந்து
வைகினர் ;
உருளுறு தேரவன்
உதயம்
எய்தினன்.

[இருள் உற — இருள் பொருந்தியிருக்கையில். எய்துவது—ராமனை அடைவது. பொருள் உற உணர்ந்த — செய்ய வேண்டிய காரியத்தை நன்றாக உணர்ந்து கொண்டிருந்த. அப் புலன்கொள் புந்தியார் — அந்த விவேகமுள்ள புத்திமான்கள். மருள் உறு — மயக்கம் பொருந்திய. வைகினர் — தங்கினார்கள். உருள் உறு தேரவன் — ஒற்றைச் சக்கரம் அமைந்த தேரை உடைய சூரியன்.]

சூரியோதயம் ஆகிறது. ராமன் கடற் கரையில் உலாவிக்கொண்டிருக்கிறான். கண்கள் கடற் கரையிலுள்ள தாழைகளையும் புன்னை மரங்களையும் மணல் மேடுகளையும் பார்க்கின்றன. மனக் கண்ணோ சீதையை நோக்கித் தளர்ந்த வண்ணமாயிருக்கிறது.

அலைகள் புரண்டு வருகின்றன. அந்தக் கரையோரமாகச் சில பரவ மாதர்களையும் பார்க்கிறான். அந்தப் பெண்களும் துயரத்தோடிருக்கின்றனரே !

மீன் பிடித்தல், முத்துக் குளித்தல் முதலிய தொழில்களை முன்னிட்டுப் போயிருக்கிறார்கள் கணவர்கள். பிரிந்த துயரத்தால் வருந்திக் கண்ணீர் வடிக்கும் அந்தப் பெண்களைப் பார்க்கிறான் ராமன்.


'நம் கணவர் க்ஷேமமாக வந்து சேர்வாரா, மாட்டாரா ?' என்ற பயம் வாட்டுகிறது உள்ளத்தை. இதற்கு ஒருவகை 'மணல் ஜோஸ்யம்' பார்க்கிறார்களாம், 'கூடல் இழைத்தல்' என்பர். இது என்ன ஜோஸ்யம் ?

'என் கணவன் இப்போது கூடுவானானால் நீ கூடு !' என்று கண்களை மூடிக் கொண்டு மணலில் சுழித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். சுழி பிளவுபடாமல் இரண்டு நுனியும் சேர்ந்து கூடிவிட்டால் கணவரும் வந்து சேர்வராம்.

இந்தப் புன்னை மரச் சோலையில் புகுந்து பார்க்கிறானும் ராமன். சீதை இருக்கும் இடம் போய்ச் சேர்வானா ? — இந்தக் குறி பார்ப்பது எப்படி ?

இந்தக் கடற்கரையை நோக்கி வருகிறான். ராவணனால் துரத்தப் பட்ட விபீஷணன், 'ராமனைப் போய்ச் சேரலாமா ? காலம் வந்து விட்டதல்லவா ?' என்று குறி பார்க்கிறானா ?


1938
ஹரிபுரி
காங்கிரஸ் தலைவர்
சுபாஷ் சந்திர போஸ்



29. பித்தமும் தெளிவும்

விடியற்காலமானதும் கடற்கரையை அடைந்த ராமன் தான் நின்ற கரையிலிருந்து சீதை இருந்த எதிர்க் கரையை அடைவது எப்படி என்று ஆலோசிக்க முயன்றான். கடற்கரைக் காட்சிகள் அந்த நினைவைச் சற்று மறக்கச் செய்தன.

உப்பங்கழிகளும் பறவைகளும் புன்னை மரங்களும் பூக்களும் மணற் பரப்பும் அலைப் பெருக்கும் உள்ளத்தைக் கவர்ந்து மகிழ்வித்தன. ஆனால் இந்தக் காட்சிகளைச் சீதையுடன் அனுபவித்தற்கு இல்லையே! பிரிவுத் துயர் கடற்கரைக் காட்சியை மறைத்து விட்டது.

மணலில் சுழித்துக் குறி பார்த்துக் கொண்டிருந்த பரவ மாதர்களும் பிரிவுத் துயரத்தை நினைவூட்டினார்கள்; சீதையை நினைவூட்டினார்கள். ஆணும் பெண்ணுமாகக் காணப்பட்ட பறவைகளும் ராமனைப் பெருமூச்சு விடச் செய்தன.

துயரம் அதிகரித்தது. சினமும் பொங்குகிறது. இதழைப் பல்லால் கடித்துக்கொண்டு அந்த உணர்ச்சிகளை அடக்கிக் கொண்டான்.

அப்போது சுக்கிரீவன் முதலானவர்கள் அங்கு வந்து ஆறுதல் கூறி, ராமனை இருப்பிடத்திற்கு அழைத்துக்கொண்டு போகிறார்கள். மனத் துயரம் ஒருவகையாகக் கொஞ்சம் தணிவது போலத் தோன்றுகிறது.

இந்த நிலையிலுள்ள ராமனைக் கவிதை காட்டுகிறது:

இத்திறம் எய்திய
காலை, எய்துறும்
வித்தகர் சொற்களால்
மெலிவு நீங்கினான்
ஒத்தனன் இராமனும்;
உணர்வு தோன்றிய
பித்தரின் ஒருவகை
பெயர்ந்து போயினான்.

[இத் திறம்–இந்த நிலை. எய்திய காலை–(ராமன்) அடைந்திருந்தபோது. எய்துறும்-அங்கு வந்து சேர்ந்த. வித்தகர்-அறிவாளிகள். நீங்கினான் ஒத்தனன்–நீங்கியவனை ஒத்தவனாய். உணர்வு–இடையிடையே தோன்றும் தன்னறிவு. பித்தரின் – பைத்தியக்காரர் போல. பெயர்ந்து – இடத்தை விட்டு.]

பைத்தியக்காரனுக்கு இடையே சொந்த அறிவும் வருவதுண்டல்லவா? அப்படித்தான் ராமனுக்கும் உணர்வு வருகிறதாம்.

இந்த நிலையில் சுக்கிரீவன் முதலானவர்களுடன் ராமன் போய்த் தன் இருப்பிடத்தில் அமர்ந்ததும், விபீஷணன் வந்து சேர்கிறான், வானர சேனை தங்கியிருந்த அந்தப் பக்கத்திலே.

வந்ததும் குழப்பம்

அண்ணனான ராவணன் விளைத்த பெருந்துயரினால் ராமன் மேலே சொன்னபடி அல்லற்பட்டுக் கொண்டிருக்கும்போது வந்து சேர்கிறானும் சூது வாதறியாத தம்பி.

உறைவிடம் எய்தினான்
ஒருங்கு கேள்வியின்
துறை-அறி துணைவரோ(டு)
இருந்த சூழலின்,
முறைபடு தானையின்
மருங்கு முற்றினான்,
அறைகழல் விடணன்
அயிர்ப்பில் சிந்தையான்.

[உறைவிடம் – இருப்பிடம்; தங்குமிடம். எய்தினான் – எய்தியவனாகிய ராமன். ஒருங்கு கேள்வியின் – கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுப் பொருளின். துறை – துறைகளை. அறி

துணைவரோடு – அறிந்திருக்கும் தன் நண்பர்களோடு. குழுவின் – எல்லையில். முறைபடு தானையின் – முறைப்படி அமர்ந்திருக்கும் சேனையின். மருங்கு – பக்கத்திலே. முற்றினன் – வந்து சேர்ந்தான். அறை கழல் – ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த. விடணன் – விபிஷணன். அயிர்ப்பில் – களங்கமில்லாத.]

வந்த அரக்கனைக் கண்டதும், சேனையில் முன்புறம் நின்ற வானர வீரர்கள் காவலின் உக்கிரம் தோன்ற எழுந்து இடி இடித்தது போல் அதட்டி ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் :

முற்றிய குரிசிலை
'முழங்கு தானையின்
உற்றனர் நிருதர்வந்(து)!'
என்ன ஒன்றினர்,
'எற்றுதிர் ; பற்றுதிர் ;
எறிதிர் !' என்(று)இடை
சுற்றினர், உரும்எனத்
தெழிக்கும் சொல்லினர்.

[முற்றிய – வந்து சேர்ந்த. குரிசிலை – ஆடவரில் சிறந்த விபீஷணனை. முழங்கு– ஒலிக்கின்ற. தானையின் – சேனையில். உற்றனர் நிருதர் வந்து – அரக்கர் வந்து சேர்ந்து விட்டார். என்ன – என்று. ஒன்றினர் – ஒன்று கூடியவர்களாய். எற்றுதிர் – தாக்குங்கள். பற்றுதிர் – பிடித்துக் கொள்ளுங்கள். எறிதிர் - கல் முதலியவற்றை எறியுங்கள். என்று இடை சுற்றினர் - என்று அவ்விடத்தில் சூழ்ந்து கொண்டனர். உரும் என - இடி போல. தெழிக்கும்—அதட்டுகின்ற.]

விபிஷணன் துணைவர்களோடு வந்து சேர்ந்தது கொஞ்சமும் எதிர் பாராத நிகழ்ச்சியாதலால் வானர வீரர்கள் கலங்கிப் போனார்கள் ஒரு கணம். அடுத்த கணமே அந்த முன்னணி வீரர்கள் ஒன்று கூடி அதட்டிய வண்ணம் அரக்கர்களைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.

'அந்த மகாபாவி—என்ன துணிவு !— வலுவில் வந்து விட்டானே !'' என்று கூட எண்ணுகிறார்களாம் :

'வந்தனன் இலங்கையர்
மன்னன் ஆகும் ; நம்
சிந்தனை முடிந்தன !'
என்னும் சிந்தையார் !

'தந்தது தருமமே !' என்று சிந்திக்கிறார்களாம். 'அதர்மத்தைத் தருமமே பிடித்துக் கொண்டு வந்து நம்மிடம் காட்டிக் கொடுத்து விட்டது !' என்று மகிழ்கிறார்களாம்.

'பத்துத் தலைகள். இருபது கைகள் இல்லையே !' என்பதைக் கூடக் கவனிக்க அவகாசமில்லை அந்த உற்சாகத்திலே, அந்த ஆத்திரத்திலே. கவனித்தவர்களும் 'இவன் ராவணன் !' என்ற அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளாமலே திண்டாடுகிறார்களாம் ; போருக்கு இழுக்கிறார்களாம்.

இந்த வானரக் கூத்தும் குதூகலமும், ஒலிக்கின்றன கவிதையில் :

'இருபது கரம், தலை
ஈரைந்(து) என்னும்அத்
திருவிலிக்(கு) அன்னவை
சிதைந்த வோ !' என்பார் ;
'பொருதொழில் எம்மொடும்
பொருதி போர்'என்பார் ;
ஒருவரின் ஒருவர்சென்(று)
உறுக்கி ஊன்றுவார்.

[கரம் – கை. திருவிலிக்கு – பாக்கியமில்லாதவனுக்கு. அன்னவை – அந்தத் தலைகளும் கைகளும், சிதைந்தவோ – சிதைந்து போய் விட்டனவோ. பொருதொழில் எம்மொடும் – போர்த்தொழிலையுடைய எங்களுடனே. பொருதி போர்– போர் செய்வாய். உறுக்கி ஊன்றுவார்– கோபித்து எதிர்ப்பாராயினர்.]

திருவாளனா ? திருவிலியா ?

பத்துத் தலைகளும் இருபது கைகளும் பெற்றிருப்பதைப் பெரும் பேருகவும்



அருந் தவமாகவும் அரக்கர் கருதுவர். உலகமோ, பயங்கரமான சக்தியென்று நடுங்கிக் கொண்டிருக்கிறது.

சீதையின் அழகை ராவணனிடம் வருணித்துக் காட்டிய சூர்ப்பணகை,

ஒருபது முகமும்
கண்ணும் உருவமும்
மார்பும் தோள்கள்
இருபதும் படைத்த
செல்வம் எய்துவ(து)
இனி நீ எந்தாய்!

[ஒருபது - ஒரு பத்து. எய்துவது- அடைவது. எந்தாய்-எமது தலைவனாகிய ராவணனே.]
என்கிறாள்.

இந்தச் செல்வனைத்தான் வானரர்கள் 'செல்வமில்லாதவன், பாக்கியமில்லாதவன்' என்ற பொருளில் 'திருவிலி' என்று குறிப்பிடுகிறார்கள்.

பால காண்டத்தில் திரு அவதாரப் படலத்திலேயே காணப்படுகிறது,

இருபது கரம், தலை
ஈரைந்(து) என்னும் அத்
திருவிலி

என்ற தொடர்.

'இவன் ராவணனாக இருந்தாலும் சரி, அல்லது வேறு அரக்கனாக இருந்தாலும் சரி: எப்படியானாலும் அரக்கன் அரக்கன் தானே!' என்று கருதியவர்கள், விபீஷணன் முதலானவர்களைச் சிறைப்படுத்தி ராமனுக்குச் செய்தி சொல்ல வேண்டுமென்று துடிக்கிறார்கள்.

இவர்களைக் காட்டிலும் ஆத்திரக்காரர்கள், சிறையில் வைத்துப் பார்ப்பதிலும்



திருப்தி அடையவில்லை. ஆனை வைத்துப் பார்ப்பதே அநர்த்தம் என்கிறார்கள்.

இப்படி ஆத்திரத்திற்கு மேல் ஆத்திரமாக வந்து அரக்கரை நெருக்குகின்ற வானரர்களை, இப்பாட்டின் சொல் நெருக்கிலே, ஓசைச் செறிவிலே காண்கிறோம்:

'பற்றினம், சிறையிடை
வைத்துப் பாருடைக்
கொற்றவர்க்(கு) உணர்த்துதும்'
என்று கூறுவார்;
'எற்றுவ தன்றியே
இவனைக் கன்(டு)இறை
நிற்றல்என் பிறி(து)?'என
நெருக்கி நேர்குவார்.

[பற்றினம் – பிடித்து. சிறையிடை – சிறையிலே. பாருடைக் கொற்றவர்க்கு – உலகத்துக்குத் தலைவராகிய வெற்றி பொருந்திய ராமபிரானுக்கு. உணர்த்துதும் – தெரிவிப்போம். எற்றுவது அன்றியே – காலால் உதைக்க வேண்டுமே அல்லாது. இறை நிற்றல் – தாமதத்துடன் நிற்பது. என் – என்ன; எதற்காக. நேர்குவார் – எதிர்ப்பார்கள்.]

அனுமன் தெளிவு

இப்படி யெல்லாம் இந்த வானர வீரர்கள் ஆரவாரஞ் செய்து கொண்டிருப்பதைத் தூரத்திலிருந்த அனுமன் பார்க்கிறான். அரக்கரையும் பார்த்து விடுகிறான்.

தன்னுடைய நம்பிக்கைக்கு உரியவர்களான இரண்டு காவலாளிகளை 'விசாரித்து வாருங்கள்' என்று அனுப்பி வைக்கிறான். அந்த இருவரும் விபீஷணாதியரின் அருகே வருகிறார்கள்.

இவர்களில் ஒருவன் அரக்கர்களை நோக்கி 'என்ன செய்தி?' என்று வினவுகிறான்.


'யார்? இவண் எய்திய
கருமம் யாவது?
போர்அது புரிதிரோ?
புறத்தோர் எண்ணமோ?
சார்வுற நின்றநீர்
சமைந்த வாறெலாம்
சோர்விலீர் மெய்ம்முறை
சொல்லுவீர்' என்றான்.

[இவண் – இங்கு. போர் அது புரிதிரோ – போர் செய்யப் போகிறீர்களோ. புறத்து ஓர் எண்ணமோ – வேறு ஏதாவது ஒரு எண்ணமோ. சார்வு – நாங்கள் சார்ந்திருக்கும் இடத்திலே. உற நின்ற நீர் – பொருந்து வந்து நின்ற நீங்கள். சமைந்த வாறெலாம் – எண்ணியிருக்கிற வகைகளையெல்லாம். சோர்விலீர் – ஒளிவு மறைவு இல்லாமல். மெய் முறை – உண்மையாக.]

விசாரணை செய்ய வேண்டும் என்று தோன்றியதே அனுமனுக்கும், அவனால் கட்டளையிடப்பெற்ற வானரர்களுக்கும் தான்!

எதிரி வர்க்கத்தினரை எதிர்பாராத நிலையில் தங்களுடன் கலந்திருக்கக் கண்டதும் ஆத்திரம் ஏற்படுவதும், மனம் குழம்பிப்போவதும் இயல்புதான். இந்த நிலையிலும் விஷயத்தைத் தீர விசாரித்து விரைவாகவே முடிவு செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுவதற்குப் பகுத்தறிவுத் திறன் விசேஷமாக வேண்டும்.

அனுமனுக்குப் பகுத்தறிவும் உண்டு: பக்தியறிவும் உண்டு. இந்த அறிவுத் திறனை இப்போது தன் ஏவலாளர் வாயிலாக வெளிப்படுத்துகின்ற அனுமன், மேலும் தன் பேரறிவை விபீஷணனது அடைக்கல விஷயத்திலே ஆலோசனை மன்றத்தில் பயன் படுத்திக் கொள்ளப் போகிறான்.



30. கண்டதும் கேட்டதும்

விபீஷணனைப் பார்த்ததுமே மதி நலம் வாய்ந்த மயிந்தனுக்கு 'இவன் நல்லவன்' என்பது ஒருவாறு தெரிந்துவிட்டதென ஊகிக்கலாம். மகா மேதாவியான அனுமனுடன் நெருங்கி உறவாடிய உள்ளமல்லவா ?

விபீஷணனுடைய மந்திரி, மயிந்தன் கேள்விக்கு விடையளிக்கும் போது,

தகவுறு சிந்தையன்,
தரும நீதியன்

என்றும், 'வாய்மையான்' என்றும் அறிமுகப் படுத்தினான்.

அந்த அகத்தின் அழகை ஏற்கெனவே முகத்தில் கண்டு கொண்டவனுக்கு, விபீஷணன் மீதும் அவனுடைய துணைவர்கள் மீதும் நம்பிக்கைதான் என்று சொல்லவா வேண்டும்?

இந்த அகத்தின் அழகெல்லாம் நெடுந் தவத்திலே பெற்ற பெரும் பேறு என்றும் சொன்னான் அனலன் என்ற அந்த அமைச்சன். இந்த வாக்கும் மயிந்தனது நம்பிக்கையை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

சுடுகின்ற தீயை ஆடையில் பொதிந்து வைக்கும் புத்திசாலித்தனம்தான் என்ன? 'அத்தகைய புத்திசாலிதான் சீதாதேவியைச் சிறை வைத்தவன்!' என்று ராவணனிடம் நேரே துணிந்து சொல்லி விட்டான் விபீஷணன் என்றான் அனலன். (சீதையைத் 'தீ'யாகக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறியுள்ள இடங்கள் பல.)

விபீஷணன் நன்மை தரக்கூடிய பல வார்த்தைகளை விரிவாகச் சொல்லியிருக்கிறான் ராவணனுக்கு. அந்த உறுதி மொழிகளை அந்தக் கண்டிப்பான குரலுடன் மயிந்தனிடம் தெரிவித்து விபீஷண இதயத்தை அப்படியே திறந்து காட்டுவது போலப் பேசுகிறான் அனலன்:

'சுடுதியைத் துகிலிடைப்
பொதிந்து துன்மதி!
இடுதியே சிறையிடை
இறைவன் தேவியை!
விடுதியேல் உய்குதி;
விடாது வேட்டியேல்
படுதி'யென்(று) உறுதிகள்
பலவும் பன்னினான்.

[சுடுதி – சுடுகின்ற தீ. துகிலிடை – ஆடைக்குள். துன்மதி – துர்ப்புத்தியுள்ள ராவணனே. இடுதியே சிறையிடை – சிறையில் வைத்திருக்கிறாயே. விடுதியேல் – விட்டு விடுவாயானால். உய்குதி – பிழைத்து விடுவாய். வேட்டியேல் – விரும்புவாயானால். படுதி – இறந்தொழிவாய். பன்னினான் – விரிவாகப் பன்முறை சொன்னான்.]

துன்மதி யார் ?

ராவணனே விபீஷணனை முதன் முதல் 'துன்மதி!' என்று அழைத்தவன். ராமனை மானுடச் சட்டை போட்டுக் கொண்டு வந்த பரம்பொருள் என்று விபீஷணன் கூறியதும் 'கொச்சைத் துன்மதி' என்று அழைத்தான்.

'இரணியன் வதைப் படல'த்திலே இரணியன் பிரகலாதனைத் 'துன்மதி!' என்று விளித்ததாக விபீஷணன் ராவணனுக்குச் சொன்னான். பிரகலாதனைத் 'துன்மதி' என்பது போலத்தான் விபீஷணனைத் 'துன்மதி' என்பதும்—என்ற குறிப்பை அங்கே உய்த்துணர்கிறோம்.

ராவணனைத் 'துன்மதி' என்று விபீஷணனுடைய உள்ளம்தான் சொல்லி

யிருக்க வேண்டும்; உரையால் சொல்லி விடவில்லை.

ஆனால் விபிஷணனுடைய கண்டிப்பான புத்திமதியும் எச்சரிக்கைகளும், கேட்டவர்களுக்கு, ராவணனைத் 'துன்மதி' என்று அழைத்து அறிவுறுத்துவது போலக் காதில் விழுந்திருக்க வேண்டும்.

ஆகவே விபிஷணனுடைய உரைகளோடு உள்ளத்தைச் சேர்த்துத் தெரிந்து கொண்டிருக்கும் அனலன், ராவணனைத் 'துன்மதி' என்று விபிஷணன் அழைத்ததாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

'மதியின் நீங்கினான்' என்று தன் சொந்த அபிப்பிராயமாக ராவணனை அனலன் அடுத்த பாட்டிலே குறிப்பிடுவதும் கவனிக்கத் தக்கது.

'இனி என் கண் முன்னே நிற்பாயானால் செத்தாய்! இந்த இடத்தை விட்டு ஓடிப் போய்விடு' என்று 'துன்மதி'யாகிய ராவணன் துரத்திய பின்பே அவனை விட்டு விபிஷணன் விலகி வந்தானென்பதையும் அனலன் வற்புறுத்துகிறான்:

'இறந்தனை நிற்றியேல்
என்ன இன்னவன்
துறந்தனன்'
எனவிரித்(து)
அனலன்
சொல்லினான்.



ராவணன் தான் முதன்முதல் விபீஷணனைத் துரந்தான் என்பது குறிப்பு. அதர்மம் அண்ணன் வடிவில் இருந்தாலும் அந்த உறவை அறுத்துக் கொண்டு துறப்பதே விபீஷண சத்தியாக்கிரக தர்மமாகும். ஆனால் அப்படித் துறப்பதற்கு முன் திருத்துவதற்கு வேண்டிய முயற்சிகளையெல்லாம் செய்துவிட வேண்டுமென்பதும் சத்தியாக்கிரக தர்மம்தான்.

அத்தகைய முயற்சிகளின் பயனாக விபீஷணனுக்குக் கிடைத்த பலன், அண்ணனுடைய திருத்தமல்ல; அந்தத் துன்மதியே இவனைப் 'போ' என்று துறந்ததுதான்.

ராவணன் துறவு விபீஷணன் துறவை எவ்வளவு எளிதாக்கி விட்டது பாருங்கள்! 'அவன் அருளால் அவன் தாள் வணங்க' விதி உதவியிருக்கும் வாய்ப்பு இது!

குழப்பத்திலிருந்து கோவிலுக்கு

அனலனுடைய ஆணித்தரமான வார்த்தைகள் விபீஷணனுடைய சாந்த சொரூபத்தையும் நோக்கத்தையும் அருமையாகத் தூக்கிக் காட்டி விடுகின்றன மயிந்தனுக்கு. மயிந்தன் அனலனை நோக்கி, 'நீ மனமொத்துச் சொல்லியதை நான் எங்கள் தலைவனுக்குச் சொல்லுவேன்' என்று சொல்லி பரபரப்பும்


அமைதியின்மையுமாக இருந்த இடத்தை விட்டு ராமன் இருக்கும் இடம் நோக்கிப் புறப்படுகிறான்.

இந்த நிலையிலும் அங்கு நின்ற வானர வீரர்களை நோக்கி, 'ஜாக்கிரதை!' என்று எச்சரித்துவிட்டுக் கிளம்புகிறானும். 'பகைவர்களுக்கு இடங் கொடாமல் இருக்க வேண்டும்' என்ற காவலுள்ளத் தின் விழிப்பை இந்த மயிந்தனிடத்திலும் காண்கிறோம்.

எத்தனை ஆரவாரங்களுக்கும் குழப்பங் களுக்கும் ஐயங்களுக்கும் கவலைகளுக்கும் இடையே இருந்து இப்போது வெளிப் பட்டு வருகிறான் மயிந்தன்! ராமனிடம் வந்து சேர்ந்ததும் இந்த உள்ளம் அதிசயமான அமைதி பெறுகிறதாம்.

இந்த அமைதி, விபீஷணன் சரணாகதி செய்து அடையப் போகும் அமைதிக்கு 'முன்னோடி' யாக அமைகின்றது, கம்பனது கலைச் சிற்பத்திலே.

இந்த ராம தரிசனஅமைதியை அகமகிழ்த்துக் காட்டும் பாட்டோவியத்தைப் பாருங்கள்:



தருமமும் ஞானமும்
தவமும் வேலியாய்,
மருவரும் பெருமையும்
பொறையும் வாயிலாய்,
கருணையங் கோயிலுள்
இருந்த கண்ணனை
அருள்நெறி எய்திச்சென்(று)
அடிவணங்கினான்.

[மருவரும் – பொருந்திய. பொறை – பொறுமை. வாயிலாய் – வாசலாக. அருள்நெறி எய்திச் சென்று – அவன் அருள் வழியே நெருங்கிச் சென்று; வரலாமென்று நியமித்தபின் கிட்டிச் சென்று.]

பக்தன் கோவிலுக்குள் போய் 'நீயும் நானுமாய்' என்றவாறு ஏகபோக தரிசனம் செய்து சாந்தி பெறுவதை நினைவூட்டு கிறது இப்பாட்டு.

முப்பெரு மதில்கள். இரண்டு வாசல்கள், பெருமை பொறுமை என்பதாக. உள்ளே மூர்த்தியிருக்கும் கர்ப்பக் கிரகம், திரை விலக்கிச் சந்நிதானத்திற்கு வரலா மென்றதும் உட்புகுந்து செய்யும் தரிசனம். அடி வணங்குதல்.

இத்தகைய தென்னாட்டுத் திருக்கோயிலில் புகுந்து தரிசனம் செய்வது போல் ராமன் இருக்கும் இடம் போய் அடி வணங்குகிறான், செய்தி சொல்ல வந்திருக்கும் மயிந்தன்.

பாடிப் பாடிப் பரவசமாகும் போது நாமும் மயிந்தனுக்குக் கிடைத்த ராம தரிசன இன்பத்தில் பங்கு கொள்கின்றோம்.

மூன்று அணிகளாக வானர வீரர்கள் ராமனைச் சூழ்ந்திருக்கிறார்கள். உள்ளே கர்ப்பக் கிரகத்திலிருக்கும் மூர்த்தி போலிருக்கிறான் கருணாமூர்த்தியான ராமபிரான்.

அனுமதி பெற்று அவனை அடைந்த மயிந்தன், 'ஒன்று சொல்ல வேண்டும்' என்று செய்தி தெரிவிக்கவும் அனுமதி வேண்டுகிறான்.

ராமனும் உடன்பாடு தோன்றத் தன் சடை முடியை அசைத்துக் கொண்டு அனுமதி கொடுக்கிறானும்:

மண்டிலச் சடைமுடி
துளக்கி, 'வாய்மையாய்!
கண்டதும் கேட்டதும்
கழறு வாய்'என்றான்.

[மண்டிலச் சடை முடி – வட்டமாகக் கட்டிய சடையை யுடைய தலையை. துளக்கி – அசைத்து. வாய்மையாய் – உண்மையுடையவனே. கழறுவாய் – அப்படியே உள்ளபடி சொல்லுவாய்.]

சமர்ப்பிக்கும் அறிக்கை

தான் கண்டதையும் கேட்டதையும் மயிந்தன் ஆறு கவிகளில் சொல்லுகிறான். இந்த அறிக்கை அருமையாக உருப் பெற்றிருக்கிறது.

'வினைவினை அறிந்திலம்' — அதாவது என்ன வினையுமோ எங்களுக்குத் தெரியாது — என்ற ஆரம்பமே கவனத்தை ஈர்க்கிறது. விபீஷணப் பெயரையும் சொல்லித் தான் மேலே போகிறான்.

'நால்வருடனே வந்து சேர்ந்துவிட்டான் நமது சேனைக்கிடையே' என்கிறான். இப்பேச்சினிடையே விபீஷணனை,

களவியல் வஞ்சனை
இலங்கைக் காவலற்(கு)
இளவல்

[களவியல் வஞ்சனை – திருட்டுத் தொழிலோடு சேர்ந்த வஞ்சனை. காவலற்கு – காவலனுக்கு; அரசனாகிய ராவணனுக்கு. இளவல் – தம்பி என்று குறிப்பிடுகிறான்.]

தான் கண்டதுடன் கேள்விப்பட்டிருப்பதையும் சொல்லி, 'விபீஷணனை நம்பலாமா, நம்பக் கூடாதா!' என்று தன் உள்ளத்தில் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே ஊஞ்சலாடும் தன் ஐயப்பாட்டையும் உள்ளவாறு புலப்படுத்துகிறான்.

தான் அங்கே போனபோது கண்ட தடபுடல்களையும், அந்தக் குழப்பத்திற்கிடையே தான் செய்த விசாரணையையும், அப்பால் நிகழ்ந்ததையும் சொல்லுகிறான்:

'கொல்லுமின்; பற்றுமின்'
என்னும் கொள்கையால்
பல்பெருந் தானைசென்(று)
அடர்க்கப் பார்த்து,யான்
'நில்லுமின்' என்று,நீர்
யாவிர்? நும்நிலை
சொல்லுமின்' என்ன,ஓர்
துணைவன் சொல்லினான்.

[கொல்லுமின்–கொல்லுங்கள். பற்றுமின்–பற்றிக் கொள்ளுங்கள்; கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். கொள்கையால்–அபிப்பிராயத்தோடு. பல் பெருந் தானை–பலமான வானரப் பெருஞ்சேனை. அடர்க்க–வந்தவர்களைக் கிட்டி நெருக்க முயல. நில்லுமின்–நில்லுங்கள். உம் நிலை சொல்லுமின்–உங்கள் நிலையைச் சொல்லுங்கள்.]

ராமனைச் சரணமாக அடைய விபீஷணன் வந்திருக்கிறான் என்றும், அவன் தூயவன் என்றும், தூய வரங்கள் பெற்றிருப்பவன் என்றும், 'முடித்தலை புரளும்!' என்பதாக ராவணனுக்கு எச்சரிக்கை செய்தவன் என்றும் விபீஷணனது துணைவன் சொன்னதை ராமனுக்கு விவரமாகவே தெரிவிக்கிறான்.

விபீஷணனைக் குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்ற மனப்பான்மையுடன் பேச ஆரம்பித்தவன்,

சரண்புகுந் தனன்என
முன்னம் சாற்றினான்

என்றும்,

தூயவன் என்பதோர்
பொருளும் சொல்லினான்

என்றும்,

நற்பொருள் உணர்த்தினன்
என்று நாட்டினான்

என்றும் அந்தத் துணைவன் சொன்னதை யெல்லாம் அழுத்திச் சொல்லுகிறான்.

உள்ளத்திலே ஐயப்பாடு ஒரு புறம்; விபீஷணனுக்கு அநீதி செய்து விடக் கூடாதே என்ற கவலை ஒரு புறம். இந்த நிலையை வெளியிடுகிறது மயிந்தன் அறிக்கை.

அண்ணனைத் துறந்து வந்தவனை எப்படி நம்பலாம்? அண்ணனுக்கு உடன்பட்டே வஞ்சனையாகவும் வந்திருக்கக் கூடுமல்லவா! இந்த ஐயப்பாடுகள் மயிந்தனுக்கு உண்டு.

'முடிவு செய்யும் பொறுப்பு நமக்கில்லை; ராமனுக்குத்தான். ஆனால் கண்டதையும் கேட்டதையும் தர்க்க முறையில் அறிவிப்பது நமது பொறுப்பு' என்ற நிலையில் தான் மயிந்தன் செய்தி சொல்லி முடிக்கிறான்.

புத்தி சொன்ன விபீஷணனை ராவணன் துரத்தி விட்டான் என்பதையும், தான் அனலன் மூலம் அறிந்தவாறு மயிந்தன் அறிவிக்கிறான்.

கண்டதையும் கேட்டதையும் எப்படி அறிக்கையிடுவது என்பதற்கு மயிந்தன் வாக்காக வரும் கவிகள் ஒரு நல்ல வழி காட்டி.